மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII.	Madras: May 1911.	No-5.
புத்தகம் - ௧௩.	சென்னப்பட்டணம்: மேமீ 1911.	இலக்கம் - 5.

ஸ்ரீ காசி.

நமது பத்திரிகையில் விசித்திரமான சித்திரப்படங்களைப்பிரசுரிக்க ஏற்பாடு செய்துவருகிறோம். மார்ச்சுமீ பத்திரிகையில் நமது வைசிராயின் உருவப்படத்தைப் பிரசுரித்திருந்தோம். இம்மாதப் பத்திரிகையில் ஸ்ரீ காசியின் உருவப்படத்தைப் பிரசுரித்திருக்கிறோம். இன்னும் ஜூலைமீ அதாவது ஆடிமீ முதற்கொண்டு அதிக சித்திரப்படங்கள் ஒவ்வொரு பத்திரிகையிலும் வெளிவரும். நமது கையொப்ப நேயர்கள் இப்பத்திரிகைஇன்னும் விருத்தியடையுமாறு, தங்கள் நண்பர்களும் கையொப்பம் செய்யும்படி உதவிபுரிவார்களென்று நம்புகிறோம். வருஷம் ரூபா 2 விலையுள்ள சித்திரப்படங்களடங்கிய மாதாந்தரப்பத்திரிகை இது ஒன்று தான். இதை நாம் 12-வருஷங்களாகப் பொறுமையுடன் நடத்திவருவதும் யாவருக்கும் தெரிந்த விஷயம். இதைஇன்னும்பரவச்செய்யவேண்டுமென்றஎண்ணம்நமக்குப் பூராவாக இருந்து வருகிறது இவ்வெண்ணம் நிறைவேறுமாறுஈசன் அருள்புரிவாராக.

காசி இந்துக்களுக்கு விசேஷ புண்ய ஸ்தலம். காசியில் மரணம் அடைந்தால் மோக்ஷம் கிடைக்குமென்று சிலர் எண்ணுவதுண்டு. இது கங்காநதிக்கரையிலிருக்கிறது. இங்கு 1500 ஆலயங்களும், 200 பள்ளிவாசல்களும், அரண்மனைகளும், பெரிய கட்டடங்களுமிருக்கின்றன. தெருக்களெல்லாம் குறுகலாகயிருக்கின்றன. வண்டிகள் சில தெருக்களில் போகமுடியாதாம். இங்குள்ள வீடுகள் கற்களால் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் சில வீடுகளுக்கு 6 மெத்தையுண்டு. இங்கு பித்தளைப் பாத்திரங்கள் விசேஷம். காசிதுப்பட்டா, பட்டு முதலியவைகள் அதிகம்.

நமது கவர்ன்மெண்டாரால் ஒரு காலேஜ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இது 1853-ம் வருஷத்தில் கட்டி முடிக்கப்பெற்றது. 1791-ம் வருஷத்தில் ஒரு சமஸ்கிருத காலேஜ்ஜையும் ஸ்தாபித்தார்கள். இங்குள்ள ஆலயங்களில் இந்துக்கள் சென்று அவர்களே கடவுளுக்குப் பூசைமுதலியவைகள் செய்யலாம். பிராமணர்கள் தாம் செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை.

இந்நகரத்திற்குத் தெற்கில் துர்க்கா கோயிலிருக்கிறது. இங்கு குரங்குகள் அதிக முண்டு. விஸ்வேஸ்வரர் ஆலயத்தைப்பார்த்து வராதவர்கள் கிடையாது. இது ஆலயங்களிற் சிறந்தது. இங்கு எவரும் யாதொரு தடையின்றி உட்சென்று சுவாமியைத் தரிசிக்கலாம். அபிஷேகம், பூசை முதலியவைகளையும் செய்யலாம். அநேக தீர்த்தங்கள் இங்கிருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே சிறப்புண்டு. இவைகளைப்பற்றி இன்னொரு தடவை எழுதுவோம். இங்கு பிராமணர்கள் அதிகம். சந்நியாசிகளும் அதிகம் தான். இவர்களுக்குச் சாப்பாட்டுக் கவலை கிடையாது. தர்மசத்திரங்கள் அநேகமிருக்கின்றன. இவர்கள் சுலபமாகப் புசித்துக்கொண்டும் காலத்தை லகுவாய் கழித்து வருகின்றனர்கள்.

அன்னிபெசான்ட் அம்மாள் இந்து சன்ட்ரல் காலேஜ்யை ஸ்தாபித்து நடத்திவருவது யாவருக்கும் தெரியும். இம்மாது ஒரு கலாசாலையையும் ஸ்தாபிக்க முயன்று வருகிறாள். காசிராஜா அவர்கள் தமது அரண்மனைகளிலொன்றை இதற்கு இனமாக முன்பே அளித்திருக்கிறார்கள். அது பெரிய அழகான கட்டடம். இங்குள்ள கங்காநதிப் பாலம் மிக அழகானது. உஷ்ண காலங்களில் மிக்க உஷ்ணமாயிருக்கும், மழை காலத்தில் குளிர் அதிகம். காய்கறிகள் இங்கு வெகு செழிமையாக பயிராகின்றன. தயிர், பால், வெண்ணெய் எப்போதும் ஏராளமாகக் கிடைக்கும். கங்காதீர்த்தம்தான் சகல ஜனங்களுக்கும் அருந்தவும் ஸ்நாநம் முதலியவைகள் செய்யவும் உதவுகிறது. இதன் மகிமையைப்பற்றி அநேகர் விசேஷமாகப் புகழ்ந்து வருவதும் யாவருக்கும் தெரியும்.

சர்வஜித்.

43-வது அத்தியாயம்.

சிறு கோயிலின் கர்ப்ப கிருகத்திற்கு முன்பாக ஸர்வஜித், குருமார்களிலநேகரும், அவர்களில் நித்யாநந்தரும், ஜில்லா அதிகாரியும் உரையில் தொங்கிக்கொண்டிருந்த கத்திகளை உடைய அவனுடைய ஆட்களும், பிரபு அநங்கனும் அவனது ஆட்களும், பிரபு புஷ்யமித்திரருடைய ஆட்களில் சிலரும் புடைசூழ, பகவத் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான்.

பிரபு புஷ்யமித்திரர் அங்கே இல்லை; அவருக்கு மூர்ச்சை முற்றிலும் தெளிந்தபாடில்லை. கட்டிலில் படுத்தபடியே இருந்தார். வாதனும் தேக அசௌக்கியத்தால் வெளிக்கிளம்ப முடியாமல் இருந்தான்.

அங்கு வந்திருந்தவர்களின் மனோநிலை நமது கதாநாயகனைக்குறித்து எப்படியிருந்தது? நித்யாநந்தர் ஸர்வஜித் குற்றவாளியல்லவென்று முற்றிலும் நம்பினாரென்பதை நாம் அறிந்த விஷயம். மற்றவர்களில் பிரபு அநங்கன் நீங்கலாக கிட்டத்தட்ட எல்லோரும், ஸர்வஜித்தினது பல நற்குணங்

கனைக் கேள்விப்பட்டிருந்தார்களாதலால், அவனிடத்தில் அனுதாபமுள்ள வர்களாகவே இருந்தார்கள். இப்படிப்பட்ட சிறுவன் கொலை செய்திருக்க முடியுமாவென்ற சந்தேகங்கொண்டவர்களாகவும், இவனுக்கு இக்கதியா வர வேண்டுமென்றும் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

இது நிற்க, புரோகிதர்கள் செய்யவேண்டிய கர்மங்களை யெல்லாம் முடித்து, காட்டை நோக்கிப் புறப்பட ஆயத்தமாயிருக்கையில், ஒரு மனிதன்; "என்னை விட்டுவிடு; என்னைவிட்டுவிடு. ஓடிப்போ என்னைப் பின்தொடருவதை நிறுத்திவிடு" என்று சொல்லிக்கொண்டே அவ்விடம் ஓடிவந்தான். வந்தவன் சந்நிதிக்கு நேரே வந்து மண்டிபோட்டு விழுந்தான். எல்லோரும் அவனை வரதனென்றறிந்தார்கள்.

அவன் தூக்கத்திலிருந்தா னென்பதும் எல்லோருக்கும் நன்கு விளங்கிற்று; ஏனெனில், அங்கிருந்த சிலர் அவனை என்ன சங்கதி என்று கேட்க, அவன் பதிலொன்றுஞ்சொல்லவில்லை. இப்படியிருக்க, பிரபு அநங்கன் தானிருந்தவிடத்திலிருந்து புலிபோல் பாய்ந்து, வரதனைப் பிடித்துக்கொண்டிருந்தவர்களைக் கடுமையானசொற்களால் விலகச்சொல்லி வரதனது தோள்களில் கையைப்போட்டு அவனை பலமாய் உலுக்கிக்கொண்டே, "ஏ புத்தியில்லாத கிழவா! இங்கே நடக்கிற கிரியைகளையும், சனங்களிருக்கும் நிலைமையையும், சற்றும் கவனியாமல், மரியாதையில்லாமல் தாறுமாறுய் உளறிக்கொண்டு எங்கே வந்தாய்?" என்று சொல்லவே, வரதன் விழித்துக்கொண்டான், அங்கு நடைபெற்றுக்கொண்டிருந்த விஷயத்தையும், தன்னை அநங்கன் மகா கோபத்துடன் உலுக்கிக்கொண்டிருந்ததையும் பார்த்து, தான் அவ்வளவு சனங்களுக்கு மத்தியில் எதையோ தாறுமாறுய் உளறி அதனுல் பெரிய மோசம் நிகழ்ந்திருக்கவேண்டுமென்றெண்ணி, அத்திகிலைத் தாங்க முடியாமல் ஹோவென்றலறிக்கொண்டு பூமியில் மூர்ச்சித்து விழுந்துவிட்டான். உடனே அநங்கன் தனதூழியக்காரரில் நாலைந்துபேர்களைக்கொண்டு வரதனை அப்புறப்படுத்திவிட்டான்.

இச்சம்பவம் முடிந்தவுடன் எல்லோரும் புறப்பட இருக்கையில், திடீரென்று சுவற்றில் மாட்டப்பட்டிருந்த கவசம விழுந்தது. விழுந்த ஓசை ஓய்வதற்குள்ளாக,ஒரு சிறு வெளிச்சம் தோன்றி, அவ்வெளிச்சத்திற்கு மத்தியில் கவசந்தரித்த வீரனும் அவனுடைய சீமாட்டியும் தோன்றினுர்கள். எல்லோரும் ஏககாலத்தில் ஸ்தம்பங்களாகப் பிரமித்து நின்றுர்கள்; நூற்றுக்கணக்கான கண்கள் உருவங்களை நோக்கினபடியே யிருந்தன. இவ்வுருவங்களைக் கண்ட அநங்கனைக் கவனிக்குங்கால், அவன் மண்டையில் அடிபட்டவன்போல் தட்டுத்தடுமாறிக்கொண்டு ஒரு சுவற்றில் சாய்ந்தான். ஆயினும் மற்றவர்களதைப்போல் அவனது கண்களும் உருவத்தைப் பார்த்தபடியே யிருந்தன. பொதுவாகச் சொல்லுமிடத்து, அங்கிருந்தவர்களில் ஸர்வஜித்தைத்தவிர மற்றயாவரும் திகிலை யடைந்திருந்தார்கள். எங்கு பார்த்தாலும் நிச்சப்தமா யிருந்தது.

இது இப்படியிருக்க, உருவங்கள் ஸர்வஜித்தை நோக்கிவந்தன. வந்துகொண்டிருந்த வீரனுக்கும் சீமாட்டிக்கும் ஜனங்கள் ஒதுங்கிவழிகொடுத்தார்கள். ஸர்வஜித்தினது சம்பத்தையடைந்ததும், அவர்கள் தங்கள் முகமூடித்தலை

களை யெடுத்துவிட்டு இருவரும் ஏககாலத்தில் தங்கள் வலதுகைகளைத் தூக்கி வானத்தைக்காட்டினார்கள். ஆனால் அவர்கள அப்படிக்காட்டினதின் தாத்பரியம் விளங்கவில்லை. ஸர்வஜித் சிறிது நேரத்திற்கெல்லாம் இவ்வுலகத்தை, விட்டு மேலுலகம் சென்றுவிடுவான், என்பதைக்குறித்துக் காட்டுவதற்கோ, அல்லது, நீ பயப்படாதே, எல்லாவற்றிற்கும் உயர ஈசன் இருக்கிறார், அவர் உனக்கு உதவி புரிவார் என்பதை விளக்குவதற்கோ தெரியவில்லை. இப்படி கைகளை உயரத்தூக்கினபடியே மறைந்துவிட்டார்கள். உடனே அநங்கனும் ஒருபெரிய பாரம் நீங்கினவனைக பெருமூச்சுவிட்டான். இனிமேல் அரை நிமிஷம் கூட தாமதிக்கக்கூடாதென்று நினைத்து, அநங்கன் ஜில்லா அதிகாரியைப்பார்த்து, "இனி சிறிதும் தாமதம் வேண்டாம்; கூட்டம் புறப்படட்டும்" என்றான். உள்ளங்கால் முதல் உச்சந்தலைவரை நடுங்கிக்கொண்டிருந்த ஜில்லா அதிகாரி அநங்கனைப்பார்த்து பிரபுவே, ஜனங்களெல்லோரும் திகிலிலழுந்தியிருக்கிறார்கள். அவர்கள் சற்று இழந்த தைரியத்தையடையட்டும். பத்து நிமிஷங்களுக்கெல்லாம் புறப்படலாம் என்றான். அதற்குப் பதில் பேசமுடியாமல் உதட்டைக் கடித்துக்கொண்டு சும்மாநின்றான்.

இதற்கிடையில் நித்யாநந்தர் மற்றவர்களைப்பார்த்து, "இன்று இராத்திரி நடக்கிற சம்பவங்களைக் கவனித்தால், ஒன்று நன்றாக விளங்குகிறது. உலகத்தினரல்லாதவர்கள் உலகத்தினருடைய விஷயங்களில் கலக்கிறார்கள். எக்காரணமோ தெரியவில்லை. ஒருக்கால் நாம் அநியாயமாய் சிறுவனை யமலோகத்திற்கனுப்புகிறோ மென்றோ தெரியவில்லை. அப்படி இச்சிறுவன் குற்றமற்றவனாயிருந்தால், நாம் குற்றமற்றவன் தலையில் இக்கடுந்தண்டனையாகிய பாரம் விழவேண்டாமென்று நாம் பிரார்த்திப்போம்" என்று மற்ற சந்நியாசிகளைப் பார்த்துக்கொண்டு சொன்னார்.

இதைக்கேட்டுக்கொண்டிருந்த அநங்கனுக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏ அறிவழிந்த சந்நியாசியே. உமது வார்த்தைகளால் உமது சந்நியாசிக் கூட்டத்தை பயப்படச் செய்வதோடுகூட, தைரியங்கொண்ட இவ்வீரர்களையும் பயப்படச் செய்கிறீர். சட்டத்திற்கு விரோதமான கிளர்ச்சியை இவர்கள் மனதில் உண்டு பண்ணுவீராகில் உமது தலைக்கு வந்துசேரும் ஜாக்கிரதை" என்றான்.

"பிரபுவே, ஈசன் சட்டம் மனிதன் சட்டத்திற்கு விரோதமாயிருந்தால் ஈசன் சட்டமேதான் நிறைவேறும். நான் கொண்ட மட்டில் இச்சிறுவன் குற்றவாளியல்லவென்று சொல்லுவதில் நான் தயங்கவில்லை" என்றார் நித்யாநந்தர்.

"அப்படியானால் நான் பொய் சொல்லுகிறவனென்று சொல்லுகிறீர்?" என்று கண்களில் பொறி பறக்கச்சொல்லுகிறான், "ஸர்வஜித் குற்றவாளியில்லையென்றால், நானல்லவோ பொய்யனாகவேண்டும்." ஜில்லாஅதிகாரியே, நமதேசத்து முக்கிய நியாயாதிபதியின் தீர்மானத்தை நிறைவேற்றவேண்டுவது உமதுகடன். நீர் ஏன்தாமதிக்கிறீர் என்று அதிகாரத்துடன்சொன்னான்.

"ஆம், பிரபு சொல்லுவது உண்மைதான்." என்று ஜில்லா அதிகாரி சொல்லுகிறான் "நமது கடமை நீதிவானுடைய கட்டளையை நிறைவேற்ற வேண்டியது. பெரியோர்களே, ஈசுவரனுடைய எண்ணம் நமது தண்டனை

நிறைவேறக் கூடாதென்றால், அவருடைய எண்ணத்தை எப்படியாவது நிறைவேற்றிக்கொள்ளுவார்'.

"ததாஸ்து,அப்படியே ஆகுக" என்றார் நித்யாநந்தர். இதற்குமேல் கூட்டம் காட்டை நோக்கிப்புறப்பட்டது.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி. ஏ.,

சாஸ்திரப் பாடம்.

வாயுபதார்த்தங்களும் இவற்றின் தன்மையும்.

ஜலபதார்த்தத்தின் அடியில் மேல் முகமாயும் கீழ் முகமாயும் அள்ளைப் புறங்களிலும்—எல்லாப் புறங்களிலும் அழுத்தும் தன்மை (Pressure) இருக்கிறதென்று நிரூபித்தோம் அல்லவா? அப்படியேதான் வாயு பதார்த்தங்களிலும்; நான் இனிச் சொல்லப்போகிற பரிக்ஷகளுக்கு ஒரு மூக்கு கிண்டியும், ஒரு இந்திய ரப்பர்த்துண்டும் வேண்டும். ஒரு கண்ணாடி பனலும், (Funnel) கண்ணாடிக் குழாயும் இருந்தால் மிகவும் அநுகூலம். கண்ணாடிப் பனலின் வாயை யாவது மூக்கு கிண்டியின் அகன்ற வாயை யாவது ஒரு ரப்பர் துண்டினால் கயிறு போட்டுக் கட்டிவிடலாம். ரப்பர் துண்டு எந்த நிலைமையில் நிற்கின்றது என்று பாருங்கள். ஒரே மட்டமாய் நிற்கிறது; சரி; மூக்கு கிண்டியின் இன்னொருவாயில்(பனலாய் இருந்தால் C என்னும் இடத்தில்) உதட்டை வைத்து பாத்திரத்தில் உள்ள காற்றை உரிஞ்சுங்கள்; இப்பொழுது ரப்பர் எப்படி யிருக்கிறது? (சாவகாசமாய்ப் பார்ப்பதற்காக ஒரு கட்டை விரலால் வெகு ஜாக்கிரதையாய் காற்று விடாமல் மூடிக்கொள்ளலாம்; காற்றுப்போய் விட்டால் மறுபடியும் காற்றை முன்போல் உரிஞ்சவேண்டியது தான்.) ரப்பர் குழிவாய் இருக்கிறதல்லாவா?

மறுபடி காற்றை உரிஞ்சுவதற்குப் பதிலாய் அதிகக் காற்றை உள்ளே செலுத்தும் பொருட்டு நன்றாய் அவ்வழியாய் ஊதுங்கள். இப்பொழுது ரப்பர் எப்படி இருக்கிறது? மேலே 'உப்பிக்கொண்டு இருக்கிறது. முன்னை விட இப்பொழுது நேர்மாறாய் இருக்கின்றதல்லவா?

இவைகட்குக் காரணங்களை ஆராய்வோம். நாம் உரிஞ்சுவதற்கும் ஊதுவதற்கும் முன்னே ரப்பரின் மேற்புறமும் காற்று இருக்கின்றது; அதன் அடியிலும் காற்று இருக்கின்றது; காற்றை உரிஞ்சுவதாக வைத்துக்கொள்வோம். எங்கேயுள்ள காற்றைக்குறைக்கின்றோம்? பாத்திரத்தின் உள்ளேயிருக்கும் காற்றையல்லவா? உட்புறம் காற்றுக்குறையவே ரப்பர் குழிவாகின்றது. யார் அழுத்துகிறார்கள்? ரப்பருக்குமேல் உள்ள காற்று அழுத்துகின்றது; ஆகையினால்தான் ரப்பர் குழிவாகின்றது. காற்றை உரிஞ்சு முன்னே உட்புறத்து அழுத்தமும் வெளிப்புறத்து அழுத்தமும் சரியாய் இருந்தன. காற்றை உள்ளே ஊதும் போது என்ன வாகின்றது? உட்புறம் அதிக

காற்று நுழைவதுபற்றி உளளே இருக்கும் காற்றின் அழுத்தம் வெளியே உள்ள காற்றின் அழுத்தத்தை விட அதிகமாகின்றது. ஆகையால் முன்னிலும் அதிக பலத்துடன் ரப்பரை அழுத்துவதால் ரப்பர் வெளிப் புறமாய் 'உப்பிவிடுகின்றது.

புவுன்டன் பேனாக்களுக்கு இங்கு நிரப்பு வதற்கு வைத்திருக்கும் கண்ணாடிக்குழாய்களையும் ரப்பர் குழாய்களையும் கொண்டு மேற்சொன்ன பரிக்ஷைகளைச் செய்யலாம். ரப்பர் குழாயை கண்ணாடிக் குழாயோடு ஒரு சிறு நூலால் நன்றாய்க்கட்டவேண்டும்.இல்லாவிட்டால் இடையிலுள்ள துவாரங்களின் வழியாய் காற்று, உரிஞ்ச உரிஞ்ச, உள்ளேபோய்க்கொண்டே இருந்துவிடும். ப.போல் வளைத்த கண்ணாடிக்குழாய் இருந்தால் அதில் சற்று ஜலம் ஊற்றி ஒருபுறத்தில் காற்றை உரிஞ்ச ஜலம் மேல் ஏறுவதாலும் காற்றை அதிகமாய் அடைக்க ஜலம் கீழ் இறங்குவதாலும் காற்று அழுத்தும் சக்தியை உடையது என்பதை அறிந்துகொள்ளலாம்.

காற்று ஜலத்தைப்போலவே எல்லாப்பக்கங்களிலும் அழுத்துகின்றது. மேல் நான் சொன்ன முதல் பரிக்ஷையில் ரப்பர் துண்டு குழிவாய் இருக்கும்போது கிண்டியின் மூக்கைக் கட்டை விரலால் நன்றாய் மூடிக்கொண்டுஎந்தப் புறம் பாத்திரத்தைத் திருப்பினாலும் எல்லாப் புறத்திலும் ஒரேமாதிரியாய் ரப்பர் குழிவாகவே தான் நிற்கின்றது; ரப்பர் மேலே புடைத்து நிற்கும் போதும் அப்படியே. இன்னமும் ஒரு உதாரணம்: கடையில் ஒரு அணாவுக்கு விற்கும் 'ரப்பர் ஊதியைப் பார்த்திருக்கிறீர்களா? அதற்கு மரத்தால் செய்த ஒருகுழாயும் அக்குழாயின் அடியில் இந்தியாரப்பரினால்செய்த மெல்லிய ஒரு பையும் உண்டு; ஊதினால் பை பள பளவென்று பெரிதாகும். வாயை விட்டு எடுத்தால் காற்று வெகு வேகமாய் வெளியே போவதால் பை சுறுங்கச் சுறுங்க "ஊதி" சப்தம் செய்யும். நாம் காற்றை ரப்பர் பையில் செலுத்துகிறோம் அல்லவா? அப்பொழுது நாம் உட்போக்கும் காற்று அடி, மேல், அள்ளை முதலான எல்லாப் பக்கங்களிலும் ஒரே மாதிரி ஒரே பலத்துடன் அழுத்துகின்றது என்பது புலப்படுகின்றதல்லவா? பள்ளிக்கூடத்துப்பிள்ளைகள் விளையாடுவதற்கு உபயோகப்படுத்துகிற (Foot ball bladder) என்னும் பெரிய காலால் விளையாடும் பந்தில் காற்று அடைக்கும் போதும் அதேமாதிரிதான் எல்லாப் புறங்களிலும் காற்று அழுத்துகின்றது.

ஒரு டம்ளரிலாவது கண்ணாடிப் புட்டியிலாவது நிறையத் தண்ணீர் எடுத்துக்கொண்டு அதன்மேல் ஒரு காகிதத்தைக் கிழித்துவைத்து வாயைச் சரியாய் மூடிவிடுங்கள். கையில் காகிதத்தை அழுத்திககொண்டு பாத்திரத்தைத் தலைகீழாய்க் கவிழ்க்கலாம்; பிறகு கையை எடுத்துவிட்டபோதிலும் காகிதமும் விழாது. தண்ணீரும் சிந்துவதில்லை. ஏனெனில் காற்று மேல் நோக்கி அழுத்தும் சக்தியுடையதாகையால் காகிதம் கீழே விழாதபடி தாங்கிக் கொண்டு நிற்கின்றது.

ஜலபதார்த்தங்களின் அளவைச் சுறுக்கவேண்டுமென்றால், முடியாதென்று முன்னமே சொல்லியிருககிறோம். ஒருபடிதண்ணீரை எடுத்துக்கொண்டு அதை ஒரு குழாயில் ஊற்றி அதை ஒரு கார்க்கினால் அடைத்து அக்கார்க்கின்மேல் எவ்வளவு பாரம்வைத்து அழுத்தினாலும் முன்னிருந்த அளவாகவே

இருக்கும். பலம் மிகவும் அதிகமாய்விட்டால் ஜலம் பாத்திரத்தின் பக்கங்களை அழுத்துவதுபற்றி அதை உடைத்துக்கொண்டாவது வெளியே வந்துவிடும்; இல்லையேல் அணுக்களுக்கு இடையில் உள்ள துவாரங்களின் வழியாக வாயினும் வெளியே போய்விடும். ஆகையால் ஜலத்தை அழுத்தி அதை அளவைக் குறையச்செய்வது என்பது அசாத்திய மானவேலை. ஆனால் வாயு பார்த்தங்களோ அப்படியில்லை; இடம் கிடைத்த மட்டில் பரவும் தன்மையுடயனவென்று, பாட ஆரம்பத்திலேயே சொன்னேமல்லவா? அதுபோல் கொஞ்சம் பலம் உபயோகப்படுத்தினல் பரவியுள்ள காற்றின் அளவைச் சுறுக்கிவிடலாம். தக்காளிக்காயின்மேல் மூடியில் குழைந்தைகள் காற்றை நிரப்பிக்கொண்டு அதை அழுத்தி சிறியதாகச் செய்வதை பலர் பார்த்து இருக்கலாம். இல்லை யேல் கண்ணாடி டம்லர் இருந்தால் எடுத்துத் தண்ணீரின் மேல் தளத்தில் கவிழ்த்தால் தண்ணீர் டம்ளரின் வாயில் நிற்கக்காணலாம். இது முன் செய்த பரிக்ஷைதானே !! இப்பரிக்ஷையால் காற்று டம்லரில் இருக்கிறது என்று முன் நிரூபித்தோம்; அது உங்களுக்கு ஞாபகம் இருக்கலாம். (பாடம் 2, 3,). அப்படிக் கவிழ்த்த டம்லரை இன்னும் சற்று அடியில் கொண்டுபோய்ப் பாருங்கள். ஜலம் முன்னிலும் அதிகமாய் உள்ளே போகக்காணலாம். இன்னும் அடியே கொண்டு போனல் இன்னும் அதிகமாகக் காற்றின் அளவு குறையும்; மேலே தூக்கதூக்க காற்றின் அளவும் அதிகப்படும்? இதனல் காற்றின்மேல் உள்ள அழுத்தம் அதிகப்பட, அதிகப்பட அதன் அளவும்குறைகின்றதென்பதும், அழுத்தம் குறையக்குறைய, அளவு அதிகப்படுகின்றதென்பதும் விளங்கும்,

பைசகில் வண்டியின் சக்கரத்துக்குக் காற்று அடைக்கும் கருவியையாவது, (Foot Ball) காலால் விளையாடும் பந்துக்குக் காற்று அடைக்கும் கருவியையாவது எடுத்து அதன் வாயை விரலால் அடைத்துக்கொண்டு Piston ஐ உள்ளேதள்ளினல் காற்று சுளுவில் சுறுங்குவதுதெரியும். கையை விட்டவுடன் பிஸ்டனை காற்று மறுபடி தூக்கி அடிக்கும். ஏனெனில், நம்முடைய பலத்தால் நாம் அதை அழுத்திக்கொண்டு குறைவான இடத்தில் இருக்கும்படி செய்தோம். கையை எடுக்கவே காற்று தன் பலத்தால் பிஸ்டனை வெளியே தள்ளிவிடுகின்றது. (Piston—பீச்சாங்குழலின் தண்டு. காற்று அடைக்கும் கருவிக்கு இம்மாதிரி தண்டு உண்டு).

காற்றை நமது பலத்தால் அழுத்தி அதன் அளவைக்குறைக்கலாம் என்பதையும், அவ்வாறு அளவில் குறைந்த காற்று அதிக பலத்துடன் அழுத்திக்கொண்டு முன்போலவேதன் இடத்தை அடைத்துக்கொள்ள முயற்சி செய்கிற தென்பதையும், வழிகிடைத்தால் உடனே அதிவேகமாய் புறப்படுகிற தென்பதையும், இன்னு மொருகருவியால் காட்டலாம். பிள்ளைகள் சாதாரணமாய் உபயோகிக்கும்" பாப்பட்டாங்குழல்" (Popgun) உங்களுக்குத் தெரிந்து இருக்கலாம். அதனுள் ஒருகுச்சி சரியாய் நுழையும். அதற்குள் தடையில்லாமல் கோல் செல்லும்படி எண்ணெயும் போட்டு இருப்பார்கள். ஒருபுறம் கோடியில் காகிதத் துண்டாவது ஏதாவது காய்களையாவது அடைத்து வைப்பார்கள். அக்காகிதமோ காயோ, அந்தத் துவாரத்தை நன்ருய் அடைத்துக்கொள்ளும். மற்றொரு புறத்தில் இன்னொரு காகிதத் துண்டையோ காயையோவைத்து கோலால் அதை உள்ளேதள்ளும் போது இரண்டு காய்களுக்கு இடையிலுள்ள காற்று தன் அளவில் குறையக்குறைய

அது அழுத்தும் பலமும் அதிகப்படுகிறது. இவ்விதமாய் காற்று மிகச்சுருங்கி, அதன் அழுத்தும் சக்தி மிகவும் ஜாஸ்தியானபோது வெளிப்பட வழிதேடு கின்றது. நாம் கோலால் காயைத் தள்ளும் பக்கத்தில் அதிக பலத்தோடு தள்ளுவதால் அப்புறமாய், காற்று தப்பித்துக்கொண்டு வெளியே போக வழி ஏற்படுகிறதில்லை. ஆனால் மற்றொரு பக்கத்தில் அடைத்திருக்கும் காயையோ காகிதத்துண்டையோ தள்ளிக்கொண்டு, அதிக சத்தத்துடன் வெளிப்புறப்படுகிறது.

மேற்கூறியவாறு ஒரு இடத்தில் உள்ள காற்றை தன் அளவில் குறையும்படி ஒடுக்கினால் அது தன் அளவில் குறைவதினால் அணுக்களுக்குள் பொருள் நெருக்கம் (Density) அதிகமாகின்றது. அப்படியின்றி ஒரு இடத்தில் அடைபட்டு இருக்கும் காற்றை வெளிப்போக விட்டு அதிக இடத்தை அடைத்துக் கொள்ளும்படி செய்தால் அதன் டென்ஸிடி (பொருள் நெருக்கம்) குறைகின்றது. அடுப்பின் பக்கத்தில் புகை அதிக அடர்த்தியாய் இருக்கின்றது; பரவினவுடன் அவ்வளவு அடர்த்தியாய் இருப்பதில்லை. வாசனையுடைய ஓர் காற்று (ஆவி) பரவப்பரவ அதன் வாசனையின் மிகுதியும்தணிந்து போகின்றது.

வாயுபதார்த்தங்களின் சிலதன்மைகளைப் பற்றி இப்பாடத்தில் சொன்னோம். மற்றவைகளை அடுத்த பாடத்தில் தொடர்வோம்.

ஆர். கே. சுவாமி பி.ஏ. எல்.டி.

சுயபாஷை.

பாஷை யென்பது யாது? ஒருவருடைய மனசிலிருக்கும் காரண காரியங்களை மற்றவர்களுக்கு விளக்கிக்காட்டும் ஓர் கருவி. உலகத்துக்குச் சிருஷ்டி கர்த்தாவாகிய சர்வ வியாபகர் ஒருவரேயுளர். அவரை உலகத்திலுள்ள ஜனங்கள் எத்தனை பகுதிகளாகப் பிரித்து, எனது தெய்வம், உனது தெய்வம், என்னும் வாதுடன் வணங்கி வருகின்றனர். அது போலக் கல்வியையும் எத்தனையோ பாஷைகளினால் கற்கின்றனர். எந்த பாஷை யென்றாலுஞ் சரி. ஒவ்வொருவரும் தனது சொந்தப் பாஷையைத்தான் முதல் திருத்தமாகக் கற்க வேண்டும். அதிகமான ஜனங்கள் ஆங்கிலேய பாஷையைக் கற்க விரும்புதல் யாது காரணம் பற்றியெனின், ஜீவனத்திற்கு வழி பண்ணத்தக்கதான ஏதேன் தொழில் பெறலாமென்ற நோக்கந்தான். கல்வியைக் கற்றல் உழைப்புக்கும், புகழுக்கும் மாத்திரமன்று. பயிர் பூண்டுகளுக்குத் தண்ணீர் எவ்வளவு ஆவசியகமானதோ, அதுபோல் எங்களுடைய அறிவை வளர்த்தற்குக் கல்வியுமவசியம். ஆங்கிலேயருக்கு ஆங்கிலேய பாஷை எவ்வளவு அவசியமோ, அதுபோல் எங்களுக்கு எங்களுடைய சுயபாஷை அத்தியாவசியமென்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ. அப்படியிருக்கத் தமிழ்ச் சாதியாராகிய நாம் நம்முடைய, தாய்ப் பாஷையாகிய தமிழ்ப் பாஷையை விட்டுவிட்டு, இங்கிலீஷ், லத்தீன், பிரான்சு, முதலிய அந்நிய பாஷைகளைக் கற்கவேண்டுமென்று எண்ணுதல் தவறு. நவினநாகரீக மென்

னும் இங்லீசரின் பழக்க வழக்கங்கள் தொடங்கிய தன்பின் அதிகமான இந்துக்கள் தங்களுடைய இரத்தினத்துக் கொப்பாகிய தமிழ்ப் பாஷையை வீட்டிலே தானும் பேசுகிறதற்கு வெட்கிக்கின்றனர்.

ஆங்கிலேய பாஷையைப் படித்தல் தவறென்று சொல்வதாக விளங்கப்படாது. ஆங்கிலேய பாஷையைக் கற்கிறவர்கள் அதை நல்லாய்ப் பேச வாசிக்கத்தக்கதாகவும், அத்துடன் பொருளும் வசதிகளுமிருக்குமாயின் உயர்ந்த வகுப்புகளில் வாசித்துத் தேறலும் நன்று. அதைவிட 5-ம் 6-ம் வகுப்புத்தானும் திருத்தமாய்ப் படித்து முடிக்குமுன் படிப்பை நிறுத்திவிட்டுத் தாங்களும், பெரிய புலவர்களும், கல்விமான்களுமென் றெண்ணிக்கொண்டு சாதியாசாரம், சமயாசாரம், முதலியவைகளெல்லா வற்றையும் முற்றத் துறந்துவிட்டுத் திரிவோரும் பலருளர். அத்துடனில்லாமல் தமிழ்ப் பாஷையைப் பேசுதலுங் கற்றலுந்தங்களுக் குறைவென்றெண்ணி, இனசனத்தவர்களையும், சிநேகிதர்களையும், தமிழ்ப் பண்டிதர்களையும், நிந்தித்து ஆங்கில பாஷையிற் கற்றுத் தேறியவிற்பன்னர்களோடு, தங்களுடைய சொற்ப அறிவினுலுள்ள கெட்டித் தனத்தைக் காட்டப் பிரயத்தனப்படுவதனுல் அவர்களாலும் நிந்திக்கப்பட்டு இருபகுதியாருடனுஞ் சேராமல் வெளவாலைப்போல் மறைவிலே நின்று தங்களுடைய வாழ்நாளை வீண் நாட்களாகக் குடித்து வெறித்துத் திரிவோரும் பலர். பெற்றோர்களும் தங்களுடைய பிள்ளைகளது சுயபாஷையைக் கவனியாது விடுவதால் அவர்கள் சிறு வயசு தொடக்கம் அந்நிய பாஷையிலேயே பாண்டித்திய மடைகின்றனர். வயதாகியபின்பு ஒருகாகிதந்தானும் சுயபாஷையிற் திருத்தமாய் எழுதமாட்டார்கள்.

எந்தச் சாதியாரா யிருந்தாலுஞ்சரி, அவர்கள் உன்னத ஸ்திதி யடைய வேண்டுமேயானுல், அறிவை வளர்க்கத்தக்கதான நூல்களை அவரவர் சுய பாஷையிலே கற்றல் மிகவுஞ் சுலபம். தமிழ்ப்பாஷையில் எவ்வளவு பாண்டித்தியமடைந்த பண்டிதர்களாயிருந்தாலுஞ்சரி ஆங்கிலபாஷை படியாதவர்களை வித்வான்களென்று சொல்வதுந் தவறென்று சிலர் சொல்கின்றனர். இங்கிலீசில், ஷேக்ஸ்பீயர், மில்ரன், அவர்கள் எழுதிய கவிகாவியங்களைப் போல் தமிழிலும், ஒட்டக்கூத்தர், கம்பர், திருவள்ளுவர், ஒளவையார், முதலிய வித்வசிரோன்மணிகள், புராணம், இதிகாசம், இலக்கணம் முதலிய எவ்வளவோ நூல்களை இயற்றியிருக்கின்றனர். அப்படியிருக்க இங்கிலீஷ் படித்தவர்களுக்கே, சட்ட நிரூபண சபைப்பிரதி நிதித்தெரிவு செய்யும் அங்கத்தவர்களாயிருக்கும் மகிமையு மளிக்கப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொருவரும் தங்கள் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமாயின், செல்வர்களா யிருக்கப்பட்டவர்களெல்லோரும், தங்களாலியன்றளவு ஒவ்வோர் தொகை பணங்கொடுத்து பள்ளிக்கூடங்களில்லாத ஒவ்வோர் கிராமத்திலும், பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்துச் செல்வர்கள், வறியவர்களென்னும் வித்தியாசங் காட்டாது புஸ்தகம் வாங்கவழியில்லாத பிள்ளைகளுக்கு அவைகளையுதவி ஆங்காங்கு கற்பித்தல்வேண்டும். தேசாபிமானிகளா யிருக்கப்பட்ட எல்லோரும், தங்கள்சுயபாஷாவிருத்திக்கும், சுயநடை உடைக்கும், செலுத்துகிற அவ்வளவு கவனம் அந்நிய விஷயங்களிற் செலுத்தமாட்டார்கள். நாம் ஐரோபியரது பழக்க வழக்கங்களையும், உணவு, உடைகளையுங் கை

யாடத் தொடங்குவதனால் நம்மில் அநேகருக்கு வரவைவிட செலவு அதிகரிக்கின்றது. எல்லாக் காரியங்களிலும் ஐரோப்பியரை பின்பற்ற முன்வருவதனாற் தான் அவர்கள் நம்மைக் குறைவாக எண்ணிக்கொள்கிறார்கள். இந்த நியாயத்தினாற்தான் நாம் உன்னதஸ்திதியை அடைய முடிவதில்லையென்பது "உள்ளங்கை நெல்லிக்கனிபோல" தெள்ளிதில் விளங்குகின்றது.

[ஜனவரி மாசப்பத்திரிகைக் கெழுதிய "அசுத்தவாயுவும் அதனால் விளையுந்தீங்குகளும்" என்னும் வியாஸத்தின் அடியிலே நகரியென்றிருக்கும் இருசொற்களையும் நாடென்று திருத்தி வாசித்துக்கொள்ளவும்.]

ராஜம்மாள்.

அநாதிப்பிள்ளை

லண்டன்மாநகருக்கு அதிகாரியான கதை.

(70-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்வெண்ணத்துடன் ஒருநாள் வசந்தகாலத்தில் ரம்மியமான காலைவேளைகளில் விடியற்காலமே எழுந்து லண்டன் நோக்கிப் புறப்பட்டான். கையிலோ உள்ள பணம் மிகவும் சொற்பம்; ஆனால் தான் அதிக திரவியம் நிறைந்த பட்டணத்திற்குப் போகிறான் என்பதும், அங்கே தான் சுகப்படப் போகிறான் என்ற நம்பிக்கையும் அவனுக்கு அதிக ஊக்கத்தைக் கொடுத்தன. ஆகையால் புறப்பட்டது தான் தாமதம். வெகு வேகமாய் நடக்க ஆரம்பித்தான். எவ்வளவு தூரம் நடக்கமுடியும் ஏழைக்குழந்தையால்!! வெயிலும் உக்கிரமாய் அடிக்க ஆரம்பித்தது. கையில் கொண்டுவந்த ரொட்டியும் உணவும் தீர்ந்துபோயின. சில நாழிகை வழி நடந்தவுடன் சோர்ந்து போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்துவிட்டான். இதற்குள் அவ்வழியே போகும் ஓர் வண்டி வந்தது; அதுவும் லண்டன்மாநகருக்குப் போய்க்கொண்டிருந்தது. டிக் உடனே எழுந்து வண்டிக்காரனிடத்தில் போய், தன் விருத்தாந்தங்களை ஆதியோடந்தமாய்ச் சொன்னான். சொல்லி, "ஐயா என் கால்கள் இப்பொழுது நிரம்பவும் வலிக்கின்றன! சற்று நேரம் என்னை உமது வண்டியில் ஏற்றிப் போவீராயின் என் கால் வலி நின்றவுடன் நான் நடந்து போகிறேன். தயவு செய்து எனக்கு இந்த உபகாரம் செய்தால் உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். இதைக் கேட்டதும் வண்டிக்காரனுக்கு மனது இரங்கிற்று. இச்சிறுவனாவது லண்டன் போவதாவது என்று எண்ணிக்கொண்டு "பிள்ளாய், நீ மஹா தைரியசாலி! நடந்தே லண்டன் போய்விடலாமென்று நினைத்தாயோ? எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதைச் சற்றும் கவனியாமல் இப்படி சிறுபிள்ளைத்தனமாய்த் துணியலாமா? என் வண்டி வராதிருந்தால் என்னவாயிருக்கும் உனக்கு! ஆயினும் உன் தைரியத்தை மெச்சினேன். சுவாமி உனக்கு அருள் புரியட்டும்! குழந்தாய்! ஏறிக்கொள் வண்டியில்" என்றான். வண்டிக்காரனுடைய உதவியால் சற்று நடந்துகொண்டும் சற்று வண்டியில் வந்துகொண்டும் கடைசியாய் லண்டன் நகரம் வந்து சேர்ந்தான். அவ்விடம் வந்ததும் "இது

தான் நீ பார்க்க விரும்பிய லண்டன் மாநகரம் பிள்ளாய்! இனி உன் சாமர்த்தியம்போல் பிழைத்துக்கொள்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு வண்டிக்காரன் வண்டியை ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

'லண்டன் சேர்ந்து விட்டோமே' யென்று அவன் மனத்தில் ஆனந்தம் பொங்கினபோதிலும் அந்நகரின் வீடுகளையும் தெருக்களையும்பார்த்தவுடனே குழந்தைக்கு மனம் தளர்ந்துவிட்டது! நிலமெல்லாம் தங்கக் கல்லால் பரப்பப்படவுமில்லை; ஜனங்கள் எல்லாம் பிரபுக்களாகத் தோற்றவுமில்லை. எல்லா ஊர்களிலும் தெருக்கள் இருப்பதுபோல்தான் லண்டனிலும் இருக்கின்றன. எல்லா மனிதர்களையும் போலவே தான் லண்டன் நகரத்தாரும் இருக்கிறார்கள். இவற்றுடன் சில இடங்களில் குப்பையும் கூளமும் கொஞ்சம் அதிகமாய் இருக்கின்றன. இதைத் தவிர வேறு வித்தியாசமில்லை. "இதைப் பார்க்கவா நான் இவ்வளவு தூரம் வந்தேன்" என்று ஏங்கினன் சிறுவன். "ஒரு வேளை இது வெளிப்புறமாய் இருக்கலாம். உள்ளே போனால் இன்னும் செல்வமுள்ள இடங்கள் இருப்பினும் இருக்கலாம் என்று ஒரு நாள் முழுவதும் ஆடி ஓடித்திரிந்தான் திக்கற்ற சிறுகுழந்தை. விசித்திர வீதிகளையும் கணேம்; வழியில் கண்டவர்களை "ஐயா நான் அநாதி என்னை ரக்ஷிக்கவேண்டும்; காலை முதல் உணவின்றித் தவிக்கிறேன்" என்றால் "சோம்பேரிப் பயலே உனக்கு என்ன வந்தது. சக்தியில்லையா? போய் வேலை செய்து சம்பாதியேன்? ஏன் எங்கள் கழுத்தறுக்கிறாய்" என்று கோவிப்பார்கள். ஒவ்வொருவனும் இவ்விதமாய் பதில் சொல்லவே, சிறுவன் இனி வருகின்றவனைக் கேட்டபோது அவனும் அப்படியே சொன்னால் அவனையே நமக்கு ஒரு சிறுவேலை கொடுக்கும்படி கேட்போம் என்ற எண்ணத்துடன்—அடுத்த தடவை சந்தித்த கிழவனை வணக்கமாய்க் கேட்க "எடா போக்கிரிப்பயலே நான் வேலைசெய்து சம்பாதித்துப் பிழை என்றால், நீ வேலை கொடு என்று என்னை கேலி பண்ணுகிறாயா; நீ திருட்டுப் பயல் போல் தோன்றுகின்றது; நான் யார் என்று எண்ணினாய்!! ஜாஸ்தி பேசாமல் அப்புறம் போ" என்று தன் கைத்தடியால் குழந்தையின் தலையைப் பார்த்து ஒரு அடி கொடுத்தான். "பள பள" வென்று இரத்தம் ஓடுகின்றது; கிழவன் போய்விட்டான். துடிக்கின்றான் சிறுவன். "இதற்கோ லண்டனுக்கு வந்தேன்; கருணையற்றவர்கள குடியிருக்கும் ராக்ஷஸபட்டணம் போல் இருக்கிறதே" என்று அலறி அழுதான். பசியோ ஒருபுறம் வருத்துகின்றது; தலையின் வலியோ சொல்லி முடியாது; தேகத்தில் சற்றும் பலம் என்பதே இல்லை. இம்மாதிரி கஷ்டபபட்டுக் கடைசியில் களைப்பால் ஒரு வீட்டின் திண்ணை ஓரத்தில் வாசற்படியில் படுத்து விக்கி விக்கி அழுதுகொண்டே தூங்கிப்போய்விட்டான்.

அவ்வீட்டு வாசலில் இரவெல்லாம் பனியிலும் குளிரிலும் விரைத்துப் போனான் விட்டிங்டன். மறுநாள் காலையில் எழுந்து மறுபடியும் தெருத் தெருவாய்ச் சுற்ற ஆரம்பித்தான். இன்றாவது கருணையுள்ள மனிதன் வர மாட்டானா! அவனைக் கெஞ்சினால் இரக்கப்பட்டு என்னை ரக்ஷிக்கமாட்டானா! என்று கடவுளை மனதாற்தியானம்செய்துவிட்டுப் புறப்பட்டான். ஒருவரும் இவனைக் கவனிக்கவில்லை.

கடைசியாய் ஒரு தெருவில் விசித்திரமான தொரு வீடும் அவ்வீட்டுக் கதவில் தட்டுவதற்கு ஏற்படுத்திய ஒரு கருவியும், சிறுவன் கண்ணில் பட்

டன; இவற்றைக்காணவே, "இக்கதவைப்போய் நான் தட்டினால் என்ன குற்றம்! யார் வருவார்களோ பார்ப்போம்" என்று எண்ணிக்கதவைத் தட்டினான். அவ்வீடு ஒரு பெரியவர்த்தகனுடையது; வர்த்தகனோ மஹா பணக்காரன்; பெயர் பிட்ஸ் உவாரன். கதவைத் தட்டவே, திறந்துகொண்டு சமையல் வேலை செய்யும் வேலைக்காரி வெளியேவந்தாள். அவளோ மிகக் கோபமுள்ளவள். நெஞ்சில் சற்றும் இரக்கமில்லை; முகத்தின் லக்ஷணமோ சொல்ல வேண்டியதில்லை. வானரக்களை முழுவதும் உண்டு. இவ்வளவு தன்மையும் முற்றும் நிரம்பிய அப்பெண்மணி, அப்பொழுது தான் எஜமானனுக்குச் சாப்பாட்டுக்கு வேண்டிய மேஜை முதலியவைகளை ஒழுங்கு படுத்திக்கொண்டிருந்தாள். இயற்கையாகவே, சாந்தகுணம் என்பதின் வாசனைகூட இல்லாத இப்பெண்மணி காரியம் செய்துகொண்டு இருக்கும்போது, தொந்தரவு செய்தால் அவள் கோபத்துக்குக் கேட்பானேன்?

புறப்பட்டாள் வெளியே; சிறுவனைப்பார்த்து "அடே போக்கிரிப்பயலே! நீ என்னை யார் என்று எண்ணினை? உன்போன்ற சோம்பேறிகள் கதவிடிக்கும் போதெல்லாம் திறந்து கொண்டு நீங்கள் இந்த வீட்டைக் கொள்ளையடிக்கும் படி பார்த்துக்கொண்டு இருப்பேன் என்று எண்ணினாயோ? அழகாய் இருக்கின்றது பிள்ளாய்! கதவைத்திறந்தால் உடனே ஒரு வரும் இல்லாவிடில் எதையாவது திருடிக்கொண்டு போகலாம் என்று எண்ணினாய் போலும்!! ஓடு இவ்விடத்தைவிட்டு!!" என்று பலவாறு காதிலும் கேட்கவொண்ணாதபடி வைது துரத்தினாள்.

மிஸ்டர் பிட்ஸ் உவாரன் அப்பொழுது தான் எங்கிருந்தோ வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். தன் வேலைக்காரி ஒரு சிறுவனை வைததையும் அச்சிறுவன் மிகுந்த துக்கத்துடனும், காயம் பட்டதலையுடனும் நிற்பதைக் கண்டு அவருக்கு மனம் இளகிற்று. "குழந்தாய்! உன் பெயர் என்ன? உனக்கு இவ்வீட்டில் என்ன வேலை? என்ன காரியமாய் இவ்விடம் வந்தாய்?" என்று வினவ, பிள்ளையாண்டான் தன் விருத்தாந்தமெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்லத் தொடங்கினான். வர்த்தகனும், அமைதியாயும கவனமாயும் உற்றுக் கேட்டார். உவிட்டிங்கினுடைய தோற்றத்தினாலேயே அவன் சொல்வதெல்லாம் உண்மை யென்று புலப்பட்டது; இத்துடன் சிறுவனுடைய உள்ளறிவை விளக்கும் மலர்ந்த முகமும், மரியாதையான பேச்சும் பிட்ஸ் உவாரன மனத்தைக் கவர்ந்தன. சிறுவன் பட்ட கஷ்டங்களையும், அவன் எண்ணிய எண்ணமெல்லாம் முடிவு பெறாது, ஏங்கி நிற்கும் நிலைமையையும், பசியினால் வருந்தும் பாட்டையும், பார்த்து மனம் ஆற்றாது, "குழந்தாய்! நீ சொல்வதெல்லாம் உண்மை என்பதற்குச் சந்தேகமில்லை யென்றுநான் எண்ணுகிறேன். இவ்விளம்பிராயத்திலேயே இததகைய கஷ்டம் உனக்கு நேர்ந்தது தெய்வச் செயல் தான். உனக்கு சமபாதிக்கும் வழி கிடைக்கும் வரையில் என வீட்டிலேயே நீ இருந்து விடலாம்" என்று உத்தரவு செய்தார்.

பிட்ஸ் உவாரனுடைய கருணையும், தாராளமும், புத்தி கூர்மையும், இத்தன்மைத்து என்று உங்களுக்கு விளங்குகிறதல்லவா? நான் இன்னும் அவரைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை. வியாபாரம் செய்வதிலும் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி தீர்க்காலோசனை செய்வதிலும், குறிப்பறிந்து நடப்பதிலும், ஜனங்களின் குணத்தை மதிப்பதிலும்—ஆகிய வர்த்தகருக்கு

MADRAS.

வேண்டிய பலகுணங்களிலும்,—பிட்ஸ் வாரன் மஹாபுத்திசாலி ஆகையால் டிக்கைத்தன் வீட்டில் வைத்து வளர்ப்பதினால் குற்றமில்லையென்பதை உடனே கண்டார். இவருக்கு ஒரு அருமை மகள் உண்டு. அவள் பெயர் ஆலிஸ். ஆலிஸின் வயதும், டிக்கின்வயதும் சுமார் சரியாய் இருக்கும் என்றே சொல்லலாம். அப்பெண்மணி, முதலில் வேலைக்காரி டிக்கை வைததையும், பின் தன் தகப்பனார் டிக்கின்மேல் மனமிரங்கி, வீட்டில் இருக்கும்படி உத்தரவு செய்ததையும், எல்லாம் உள்ளிருந்து, உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள். தன் தகப்பனைப் போலவே,—அவனிலும் அதிக மென்றே சொல்லலாம்—ஆலிஸும் இயற்கையாகவே, நற்குணம் வாய்ந்தவள். தன் பெற்றோர்களை வற்புறுத்தி, அனாதிப்பிள்ளையான டிக்கை, எப்படியாவது தங்கள் வீட்டிலேயே, வைத்து ரக்ஷிக்கவேண்டு மென்று, வேண்டிக்கொண்டாள். முதலில் அவள் பெற்றோர்கள் அவ்வளவு சம்மதிக்கவில்லை.; ஆனால் குழந்தை வருத்தப் படுவதைப் பார்த்து, ஒருவாறு ஒப்புக் கொண்டார்கள். டிக் வீட்டிலேயே வேலை செய்து கொண்டு சமயல்காரர்களுக்கு உதவியாய் இருக்கவேண்டியது; அப்படி வேலை செய்து வந்தால் தான் அப்பிள்ளையை வீட்டில் வைத்து, சாப்பாடு போடுவதாகச் சொன்னார்கள்.

அவ்விதமாகவே, ஏற்பாடு ஆயிற்று. ஆனால் அவ்வேலைக்காரிக்கு திருப்தியாய் நடந்து கொள்ள ஒருவராலும் முடியாது. அவளுடைய குணம் இம்மாதிரியென்பது நமக்கு முன்னமேயே தெரியுமே! சாதாரணமாய் பணக்காரர்களின் வீட்டில் உள்ளவேலைக்காரர்கள் புதிதாய் வந்து சேரும் வேலைக்காரனை நம்புவதில்லை. அதிலும் இவ்வேலைக் காரிக்கு டிக்கின்மேல் ஆதிமுதல் கொஞ்சமாவது நல்ல அபிப்பிராயமே கிடையாது. இத்துடன் தன் எஜமானன் மகளும், மற்றவர்களும் டிக்கின்மேல் அன்பாய் இருக்கிறார்கள் என்னும் பொறாமை ஒரு பக்கம். இக்காரணங்கள்பற்றி தன்னால், கூடியமட்டும் இவனுக்கு எவ்வளவு தொந்தரவு செய்யலாமோ, அவ்வளவும் தடையில்லாமல் செய்யவழிதேடினாள். சோறுபோடும்போது சற்றும், உபயோகமில்லாத ரொட்டிகளைக்கொடுப்பது ஒன்று; செய்யும் வேலைகளிலெல்லாம் குற்றம் சொல்வதுஒன்று; சரியான படுக்கையில்லாமல் கரடுமுரடான இடத்தில் படுத்து உறங்கச்சொல்வதுஒன்று; இவ்வாறு பலவிதத்துன்பங்களைச்செய்தாள். விறகுகளும் கட்டைகளும், இன்னும் மற்ற சாமான்களும் போடும் இடத்தில் டிக் படுத்துறங்கவேண்டியிருந்தது. அங்கே எலிகளும், மூஞ்சூறுகளும், சுண்டெலிகளும், இவ்வளவு என்றுசொல்லிமுடியாது.எப்படித்தூங்குவான்எழைடிக்!

இவற்றையெல்லாம் தன்யஜமானனிடம் சொல்லவும்கூடவில்லை. சொல்லிவிட்டால் அவர்களே தன்மேல் அதிருப்தியடைந்து 'வீட்டைவிட்டுப் போ' என்று சொல்லிவிட்டால் என்னசெய்வது என்ற பயம் ஒருபுறம். அவ்வாறு ஓட்டிவிடா விட்டாலும், இது சமையல்காரிக்குத் தெரிந்தால் இன்னும் அதிகமாய் வதைக்க ஆரம்பிப்பாளே என்பது ஒருபுறம். எப்படியிருப்பினும், ஒருவரைப்பற்றி மற்றவரிடம் தூஷிப்பது பொல்லாத காரியம் என்ற எண்ணம் ஒன்று; ஆகையால் 'மித்ரபேதம்' செய்ய இஷ்டமில்லாமல் எல்லாத் தொந்தரவுகளையும் அமைதியாய்ப் பொறுத்துவந்தான். கொஞ்சம் என்கையில் காசு சேரட்டும்; ஒருபூனை வாங்கிக்கொள்ளுகிறேன்; அப்பொழுது எலிகள் என்னை இப்படிப் பிடுங்கித்தின்னாதல்லவா? என்று மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

ஒருநாட் காலையில் டிக் கதவுகளைத்தேய்த்து அலம்பிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வழியாய் ஒரு ஸ்திரீ போய்க்கொண்டிருந்தாள். அவளிடம் ஒருபூனை இருந்தது. அதை வாங்குபவர்கள் யாராவது உண்டா என்று விசாரித்துக்கொண்டேபோனாள். இதைக்கண்ட டிக் அவளிடம் சென்று தன் கஷ்டத்தையெல்லாம் சொல்லி, பூனையைத் தனக்குவிற்றால் மிகவும் சௌகரியமாய் இருக்கும் என்றுசொன்னான். இதைக்கேட்ட அவ்வேழை ஸ்திரி அப்பூனையை ஒரு அணுவுக்குக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டாள். உடனே டிக் அதை வாங்கித் தான் படுத்துக்கொள்ளும் அறைக்குக் கொண்டுபோய் பத்திரமாய் வைத்து தினமும் அதற்கு அன்பாய் சாப்பாடு போட்டுவந்தான். சில வேளைகளில் தன் எஜமானன் வேலைசெய்வதற்கு வெளியே போகவேண்டியிருந்தால் அப்பொழுது தன் பூனையையும் எடுத்துப்போவது வழக்கம். இடைவிடாமல் பூனையும் டிக்கும் ஒருங்கே இருந்தபடியால் இருவருக்கும் நெருங்கிய சினேகம் உண்டாயிற்று.

பூனையிடம் டிக் அன்பாய் இருந்ததற்கு மாறாக பூனை விட்டிங்டனுக்கு மிக உபகாரம்செய்து அவனை சந்தோஷப்படுத்திற்றென்பதற்குச் சந்தேகமில்லை. தினம் எலி பிடிப்பதுமட்டும் அன்று; தன் சிறிய எஜமானன் சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொரு சிறு விளையாட்டையும் அறிந்துகொண்டு அவனுடன் விளையாடும். பலவிதமாய்க்குதிக்கும்; வேடிக்கைகள் செய்யும்; இம்மாதிரியாகக் காலம் கழிக்கும்போது சமயல்காரி தன்னை பலவிதமாய்த் துன்பப்படுத்தினபோதிலும் அத்துன்பங்களெல்லாம் சிறுவனுக்குத் தோற்றவில்லை.

ஆலிஸ் அடிக்கடி டிக்கை வந்து விசாரிப்பதுண்டு. முதல் நாள் கண்டது முதல் அப்பெண்மணிக்கு, டிக்கின்மேல் அதிக கருணையும் அன்பும் ஏற்பட்டது. சமையல்காரி தீங்கு இழைத்தபோதிலும் அவனைத்தேற்றுவாள். சில சமயங்களில் வாயில் வைவது மட்டுமின்றி கையிலும் கூடியவரையில் சமையல்காரி 'ஒரு மூச்சுப்பார்த்துவிடுவாள்'. அக்காலங்களில் விட்டிங்டன் கண்ணீர்விட்டு அழுவான். என் எஜமானன், எஜமானி, அவர்கள் குழந்தையான ஆலிஸ்,இவர்கள் என்மேல்அன்பாயிருப்பினும் இப்பிசாசுடன் யார் போராடுவது என்று துக்கப்படுவான். தானே உட்கார்ந்து தனது தூங்கும் அறையில் ஏங்குவான். அச்சமயங்களில் ஆலிஸ் அவ்விடம் வந்தால் சிறுவனைத்தேற்றுவதுடன் தானும் அவனைப்போல் சிறு குழந்தையானபடியால் அவனுடன் விளையாடுவாள். இருவரும் பூனையைப் பலவாறு 'ஆட்டி' வைப்பார்கள். அப்பொழுது தன் கஷ்டங்களைச்சற்று மறப்பான் டிக்!! இவ்விதமாய் ஆலிஸ் பல தடவைகளில் டிக்கை வந்துபார்த்தது பற்றி இருவரும் பூனையின் பிரியமான சினேகிதர்கள் ஆனார்கள்.

ஆலிஸின் நடத்தையும் குணங்களும் கண்பர்களுக்குத்தெரிய பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. மஹா அழகு வாய்ந்தவளாய்த் தன்னைக்காண்பவர் ஒவ்வொருவர் மனத்தையும் கவரும் தன்மையுடையவள் இல்லை என்றாலும், மிக்கசாந்த குணமுடையவள்!! சமையல்காரி தன்னை கஷ்டப்படுத்தும்போது தன்னைத்தேற்றும் ஆலிஸை ஒரு தெய்வமாகவே பாவித்தான் விட்டிங்டன்!! விட்டிங்டனுடைய மரியாதையும், உண்மையும், அன்பும், பிறருக்கு உழைக்கும் ஊக்கமும், புத்தி கூர்மையும் அப்பெண்ணுக்கு நன்றாய் விளங்கின. ஆகையால் அவன் விருத்தியடைவதில் ஆலிஸுக்கு அதிக சிரத்

தை ஏற்பட்டது. தன் தகப்பன் சிறந்த பணக்காரன் ஆனதுபற்றி அவரு டன் சொல்லி ஒரு குமாஸ்தாவின் உதவியால் டிக் விட்டிங்டனுக்கு எழுதக் கற்றுக்கொடுத்தாள். லண்டன் வரும் முன்னமேயே விட்டிங்டனுக்கு செம் மையாய்ப் படிக்கமட்டும் தெரியும். ஆலிஸ் செய்த பேருதவியால் சிறுவன் எழுதுவதிலும், படிப்பதிலும் இன்னும் பலவிதத்திலும் விருத்தியடை வதையும்பார்த்து ஆச்சரியப்பட்டவர்களே கிடையாது. இவ்வளவு நன்மைக் கும் காரணமாயிருந்த ஆலிஸைத்தன் குலதெய்வமென்றெண்ணி அவளிடம் அதிகமரியாதையாய் நடந்துகொண்டான்.

இம்மாதிரி சிலநாள் கழியவே பிட்ஸ் உவாரன் தனது வர்த்தகக்கப்பல் ஒன்றை வெளியூருக்கு வியாபாரத்துக்கு அனுப்ப எண்ணினான். வியாபாரத் துக்குக் கப்பல் வெளிப்படு முன்னர், தனது வீட்டில் எல்லாரையும், தனது வேலைக்காரர்களையும் தன்பால் அழைத்து, ஒவ்வொருவரையும் ஏதாவது வியாபாரத்துக்காகக் கொடுக்கும்படி கேட்பதுண்டு. அவ்வாறு கொடுப்பன வற்றை அக்கப்பற்றலைவனிடம் ஒப்புவித்து, விற்றுவரும்படி கொடுப்பது வழக்கம். ஆகையால் ஒவ்வொருவரும் தங்களுக்கு இயன்றமட்டும், தாங்கள் இஷ்டப்பட்டதைக் கொண்டுவந்து கொடுததனர். டிக்கின் முறைவந்தது; வழக்கம்போல் வர்த்தகன் பிட்ஸ் உவாரன், டிக்கையும் தனக்கு இஷ்டமான தைக் கொடுக்கும்படி கேட்டார். ஏழை விட்டிங்டன் என்னகொடுக்கப்போகி றான்! கையில் காசும் இல்லை; ஒருபொருளும் இல்லை! சாமான்கொடுத்து அனு ப்புவது எப்படி? எல்லாரும் ஏதாவது கொடுப்பதைப் பார்த்து சிறுபிள் ளைக்குத் துக்கமும் அவமானமும் மேலிட்டது. அதனால் விம்மி விம்மி அழத் தொடங்கினான். இதைக் கண்ட ஆலிஸ், உடனே தன் சிநேகிதனான டிக்கின் பக்கத்தில் நெருங்கி மெதுவாய் "டிக்டிக்! நீ அழவேண்டாம்; உன் பூனையை அனுப்பு; நடக்கிறது! நடக்கிறது!! பார்த்துக்கொள்வோம்; அழுதால் என்ன பயன்" என தேற்றினாள். உடனே டிக் ஓடிப்போய் தன் பூனையை எடுத்துக் கப்பலுக்குச் சென்று கப்பற்றலைவன் கையில் கொடுத்தான்.

பூனையைவிட்டு பிரிந்தவுடன் விட்டிங்டனுக்கு துக்கப்படப் பலகாரணங் கள் ஏற்பட்டன. முதலாவது, தன் பூனையைவிட்டுப் பிரிந்ததே அவனுக்கு வலக்கை முறிந்ததுபோல் இருந்தது; இத்துடன் அவனிடம் அன்பு பாரா ட்டிவந்த ஆலிஸ் தன் உறவினர் ஒருவனைப் பார்த்து வருவதற்குப்புறப்பட்டு விட்டாள். இப்பொழுது சமையல்காரியின் கொடுமை எவ்விதம் இருக்கும் என்பதை நீங்களே மனத்தில் பாவித்துக்கொள்ளலாம்!! வைவதும் அடிப்ப தும் மட்டும் இல்லாமல் டிக்கைத் தொந்தரவுசெய்ய மறுபடியும் ஒருவழி ஏற்பட்டது. "ஏ டிக்கே, மரம்போல் வளர்ந்தவனே, பேடிப்பிள்ளாய், உன க்கு வெட்கமில்லையா? வியாபாரத்திற்கு ஏதாவதுகொடு" என்று பிட்ஸ் உவா ரன் கேட்டால் பூனையைக் கொண்டுவந்து கொடுத்தாயே! பூனையால் பூலோ கம் சம்பாதிக்கப்போகிற சாமர்த்தியசாலியைப் பாருங்கள்!! பேஷ்! பேஷ்! நல்லவஸ்து தேர்ந்து எடுத்தாய்! உன்னைப்போல் புத்திசாலி உலகத்தில் யார் இருக்கப்போகிறார்கள்" என்று இவ்விதமாகப்பலர் முன்னிலையிலும் கேலி செய்வாள். அடியும் பொறுத்தான்; வைதசொற்களையும் பொறுத்தான்; பலர் முன்னே தான்படும் அவமானத்தை டிக் பொறுக்கமுடியவில்லை. தன் கவலை யென்கிற இருளையும் பனியையும் உடனுக்குடனே நீக்கின சூரியனாய் இருந்த ஆலிஸும் இல்லாமையால் "படமுடியாது, இனித்துயரம் படமுடியாது,

முடியாது'' என்று சொல்லிக்கொண்டு தன்னைச்சுடாமல் சுடும் கொலைகாரி யுடன் ஒரே கூரையின் கீழ் இருக்க எண்ணம் இல்லாதவனாய், மனம்புழுங்கி வீட்டைவிட்டுப் புறப்படத் தீர்மானித்துவிட்டான்.

ஒருநாள் அதிகாலையில் எல்லாருக்கும் முன்னேயே படுக்கைவிட்டெழுந்து, ஒருவர் கண்ணிலும் படாமல் சீக்கிரமே வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். லண்டன் பட்டணத்திற்கு அப்பால்போவது இலகுவில் ஆகக்கூடிய வேலையா! களைத்துப்போய், கேடு கெட்டவனாய் ஒருவழியும் தோன்றாமல் பாதையில் இருந்த ஒருபெரிய கல்லின்மேல் உட்கார்ந்தான். இக்கல் லண்டன் நகரத்தில் இன்றும் இருக்கிறது. உவிட்டிங்டன் அன்று காலையில் உட்கார்ந்ததுபற்றி அக்கல்லுக்கு இன்றையதினத்திலும் 'உவிட்டிங்டன் கல்லென்றே' சொல்லுகிறார்கள்! உடனே களைப்பால் ஒருவித மயக்கம் உண்டாயிற்று; அப்படியே சாய்ந்துகொண்டு பாதித்தூக்கமும் பாதி விழித்துக்கொண்டும் இருந்தான். அச்சமயத்தில் ஒருமணிச்சத்தம் காதில் விழுந்தது. சிறுவன் விழித்துக்கொண்டான்; அந்த மணியை உற்றுக்கேட்கும்போது,

"தங்கும் தங்குமையா விட்டிங்டன்"
"லண்டன் தலைவனே திரும்பும்"

என்று சொல்வதுபோல் இருந்தது.

லண்டன் தலைவன் ஆவேன் என்று சொல்லுகின்றது இம்மணி!! அப்படியானால் லண்டன் நகருக்கு அதிபதியாவதற்கு நான் என்ன கஷ்டமானாலும் படுவேன்; நல்லது நான் இதோ திரும்புகின்றேன்; லண்டனுக்கு மேயர் வேலையா!! பார்ப்போம்! என்ன கொடுமையானாலும் சகிப்பதற்குத் தடையில்லை; கடைசியாய் லண்டனுக்கு "மேயர்'' ஆனால் சரி'' என்று எழுந்து சரசரவென்று வீடுபோய்ச்சேர்ந்தான். நல்ல வேளையாய் அதற்குள் சிறுவனைக் காணவில்லையென்பதை ஒருவரும் அறியவில்லை. மௌனமாய் உள்ளே நுழைந்துவிட்டான். அன்றுமுதல் முன்னிலும் பதின்மடங்கு மேன்மையாக எஜமானனுக்கும் அவருடைய பெண்ணான ஆலிஸுக்கும் திருப்திகரமாய் வேலை செய்ய ஆரம்பித்தான்.

☞ வாயில்காப்போன்.

தென்னமரத்து வண்டுகள்.

இரண்டு தினுசு வண்டுகள் தென்னைமரங்களையும் மற்ற பனை தினுசுகளையும் பிடித்து அச்செடிகளுக்கு மிக நஷ்டத்தை யுண்டாக்குகிறது. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும், மலையாளத்தில் செள்ளுவென்றும் சொல்லப்பட்ட 1, 2 - வது படங்களில் காட்டியிருக்கும் வண்டு. அது தலையில் ஒரு கொம்பையுடைய கருப்பு வர்ணமுள்ள ஒரு பெரிய வண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளம் தென்னை மரங்களை இவ்வண்டுகள் துளை

த்து ஜாஸ்தி நாச மாக்குவதைப்போல் முற்றின மரங்களை கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து 3-வது படத்தில் காட்டிய புழுக்களைப்போல் வெளிவந்து, அழுகும் வஸ்துக்களை தின்று பெரிதாகிறது. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேல்சொன்ன வண்டாய் உருமாறுகிறது.

4, 5-வது படங்களில் காட்டியிருக்கும் வண்டு தமிழில் செவ்வண்டென்று சொல்லப்பட்டது. இது முன்சொன்ன கருப்புவண்டைவிட சின்னது. இதை அதினுடைய நீண்ட வளைவுள்ள மூக்கால் கண்டறிந்து கொள்ளலாம். இது பனைகளின் உச்சிகளில் சாதாரணமாய் தென்னம் வண்டாலாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த காயங்கள் பட்ட இடங்களில் முட்டைகள் வைக்கும். இதிலிருந்து வெளிப்படும் 6-வது படத்தில் காட்டியிருக்கும் புழுக்கள் உச்சிமரத்தைத் துளைத்து செடிகளைக் கொன்றுவிடும். 7-வது படத்தில் காட்டியபடி இபபுழுக்கள் நார் இழைகளைக்கொண்டு ஒரு கூடு கட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டு வாரங்களில் உருமாறி வண்டுகளாகிறது.

இவ்வண்டுகளின் கெடுதிகளை மாற்றக்கூடிய பிரயத்தனங்கள்.

தென்னம் வண்டு தான் ஜாஸ்தி கெடுதிசெடிகளுக்குசெய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்கு காரணபூத மாயிருக்கிறது. இந்த தென்னம் வண்டை அனேக இடங்களில் தற்காலம் மரங்களிலிருந்து எடுப்பதைப்போல் வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இருப்பு முள் ஊசி கொண்டு எடுத்துவிடலாம்.

2. இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளை தாரினால் தடவி மண்கொண்டு மூடிவிடுவதுடன், பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேல்சொன்ன தாரைத் தடவ வேண்டும். இப்படி செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் முட்டை வைத்த பின் மரங்களை இவைகளின் பாதையிலிருந்து சுலபமாய் நிவர்த்திக்க முடியாது.

3. பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டு தடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம் வண்டை துரத்திவிட ஏதுவுண்டு.

4. செவ்வண்டினால் பிடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டாது. ஆகையால் அவைகளை தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்த புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாகமாறி புதுமரங்களை நாசமாக்கும்.

5. ஒரு தோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீரியுடைத்து காயப்போடவேண்டும். அப்படிக் கில்லாமல் அவை

களை அழுகவிடவே கூடாது. ஏனென்றால் அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம் வண்டு பல்கி பெருகும். தோட்டத்துக்குள் எந்தவிதமான வஸ்துவும் அழுகிக்குவிய இடங்கொடுக்கக்கூடாது.

6. சில இடங்களில் தென்னமரத்து செவ்வண்டின் புழுக்கள் அடிமரத்திலிருந்து உள்ளேசென்று மரத்தைக் கெடுக்கிறதென்ற அபிப்பிராயமிருக்கிறது. ஆகையால் மேல் தரையிலிருந்து சில அடிகளுக்குமேல் மரத்தை துளைக்கும் வழக்கமிருக்கிறது. இவ்வித அபிப்பிராயம்தப்பானது. மேல்சொன்ன பிரகாரம் மரங்களை துளைப்பது அதி நஷ்டத்தை யுண்டுபண்ண ஏதுவாகும். ஆகையால் அப்படி செய்யவே கூடாது.

மேல் சொன்ன இரண்டு வண்டுகளின் நாசம் ஒன்றை ஒன்றுபொருத்ததாயிருக்கிறது. தென்னம் வண்டு நன்றாயிருக்கும் உச்சி மரங்களில் துளைகளை யுண்டாக்கி செவ்வண்டு அதில்வந்து சேர இடத்தையுண்டாக்குகிறது. செவ்வண்டுகளினால் செத்துப்போன மரங்கள் தென்னம்வண்டுகள் பல்கிபெருக நல்ல வாசஸ்தானமாகிறது. ஆகையால் மேல் சொன்ன முன் ஜாக்ரதையோடு கவனம் செலுத்தாவிட்டால், இவ்வண்டுகளால் பீடித்த தென்னம் தோப்பில் மரங்கள் நாளாவட்டத்தில் ஒன்றுக்குபின் ஒன்றாய் நாசமாவதை தடுக்க முடியாது. [படங்கள் பிரசுரிக்கப்படவில்லை. ப. ர்.]

☞ ஸி. ஏ. பார்பர்,
சர்க்கார் தாவர சாஸ்திரி.

அவர்கள் செய்தது சரி.

116-ம் பக்கத்தொடர்ச்சி.

கோவிந்தப்பய்யர் [தா]ம் எவ்விதமாயாவது இவ்விவாகத்தைத் தடுக்க, முயலவேண்டும்; ஆனால் அண்ணாசாமி சாஸ்திரியாரின் மைத்துனர் மிக்க செல்வாக்குள்ளவர். நம்மைவிட தனவந்தர். படிப்பாளி. இவர் வார்த்தையை வைதீகர்களும், லௌகீகர்களும் கேட்பார்களே யொழிய என்வார்த்தையை லக்ஷியம் செய்யார்கள். ஆயினும் வைதீகர்களைக் கொண்டு சில்மிஷங் கொஞ்சமாவது செய்யலாமென்று யோசித்து, சாஸ்திரியாரின் புரோகிதரையும் இன்னும் சிலரையும் வரவழைத்து, அவாள் வீட்டு விவாகத்திற்கு வைதீகர்கள சென்றால் தம் வீட்டில் நடக்கும் சுபாசுபங்களுக்கு ஒருவரும் வரக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொன்னார்.

சாதாரணமாக வைதீகர்கள் சாமர்த்திய முடையவர்கள். இங்கு வந்தவர்களில் சிலர் சரி அதற்கென்ன தடை யென்று அவர் முன் சொல்லிவிட்டு வெளியிற் சென்றார்கள். கோவிந்தப்பய்யர் சாஸ்திரியார்புரோகிதருடன்மடத்துக்குத் தெரியப்படுத்தலாமா வென்று யோசனை செய்தார். புரோகிதர் மட

த்தார் மைத்துனர் பக்கம் தானிருப்பார்கள். பெண் பெரியவளாகவில்லை. இது யாவருக்கும் தெரிந்த சங்கதி. ஆகையால் நாம் சும்மாயிருப்பதே நலம். ஆனால் எனக்கு மாத்திரம் வரும்படி போய் விட்டதென்றார். அதெற்கென்ன? நான் உங்களுக்கு அங்கு கிடைக்கும் வரும்படியைக் கொடுக்கிறேன். பயப்படாதேயும் என்றார்.

நிற்க, விவாக முகூர்த்தம் சமீபித்து விட்டது. வேண்டிய சாமான் முதலியவைகளும் தயாராய்விட்டன. திங்கட்கிமை காலை 12 நாழிகைக்கு முகூர்த்தம். பந்து மித்திரர்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

குறித்ததினத்தில் விவாக முகூர்த்தம் வெகு சிறப்பாக யாதொரு சண்டைசச்சரவின்றி நடந்தேறியது. வைதீகர்களுக்கு வழக்கம் போல் தக்ஷிணை கொடுக்கப்பட்டது. சாஸ்திரியாரின் புரோகிதரைத் தவிர அவ்வூரிலுள்ள எல்லா வைதீக சிகாமணிகளெல்லாம் சாஸ்திரியார் வீட்டுக்கு வந்து தக்ஷிணை பெற்று நாலுதினமும் போஜனமுண்டு மனக்களிப்புடன் சென்றார்கள்.

கோவிந்தப்பய்யர் தமது காரியம் கைகூடாததைக் கண்டு வெட்கி, தமது கிராமத்திற்கு ஒருவருடனும் சொல்லாமல் ஒரு மாதம்போயிருந்தார்.

புரோகிதர் சாஸ்திரியார் வீட்டிற்கு வந்து தான் செய்தது பிசகென்று ஒத்துக்கொண்டு தம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளவே, மைத்துனர் இன்னும் இரண்டு மாதமானபின் உமது விஷயம் கவனிக்கப்படுமென்று சொல்லி இவரை அனுப்பி விட்டார். சிலநாள் சென்ற பின் கோவிந்தப்பய்யர் தமது ஊருக்கு வந்து இராத்திரியில் சாஸ்திரியார் வீட்டுக்கு வந்து நாம் இனி பழையபடி சிநேக பான்மையாயிருக்க வேண்டும். இது வரையில் நான் பிசகு ஏதாவது செய்திருந்தால் அதை மனதில் வைத்துக்கொள்ளாமலிருக்க வேண்டுமென்றார்.

மைத்துனர் "ஐயா' ஆம், உண்மைதான், 'அடுத்த வாரம் என் தங்கை சோம வார விருதம் செய்து முடிக்கப்போகிறாள். நீர் அன்று வைதீகருக்கு முன்னிலையில் இப்படி சொல்லி விட்டால்' நலமாயிருக்குமென்னவே, அவரும் சம்மதித்து தமது இல்லத்திற்குச் சென்றார். சோமவார விருதம் முடிந்தவுடன் பெரிய விருந்து நடந்தது. அப்பொழுது கோவிந்தப்பய்யரும் புரோகிதரும் வரவழைக்கப்பட்டார்கள். இவர்கள் எல்லா கனவான்களுக்கு முன்னிலையில் தாங்கள் செய்த தப்பிதத்தை ஒத்துக்கொண்டார்கள. பின்பு எல்லாரும் குதூகலமாய் போசனமுண்டு தாம்பூலம் பெற்றுக்கொண்டு தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

மைத்துனரும் சாஸ்திரியாரைப் பார்த்து நான் சுமார் மூன்று மாதமாக இங்கிருக்கிறேன். கிராமத்திற்குப் போகவேண்டும் எனவே, சாஸ்திரியாரும் தங்கையும் சரிஅப்படியே செய்யுங்கள்;ஆனால் அடிக்கடி வரவேண்டும்என்று பதில்சொல்லவே, அவர் தமது கிராமத்திற்குப் போய்விட்டார்.ஒருவருஷம் சென்றது; சாஸதிரியார் குமாரத்தி பெரியவளானாள்.

மைத்துனர் முதலியபந்துக்கள் வந்தார்கள். மருமகன் பி. ஏ. வகுப்பில் செவ்வனே படித்துவருகிறான். சாந்தி மூகூர்த்தம் எப்பொழுது செயவது?

என்று மைத்துனருடன் யோசித்தார். அதற்கென்ன அவர்களிஷ்டப்படியே செய்வோமென்று சொல்லிவிட்டு சம்பந்திகளை நெருங்கி அவர்கள் அபிப்பிராயமென்னவென்று கேட்டார். எங்கள் குழந்தை பி. ஏ. பரிக்ஷையில் தேறியபின் சாந்திமுகூர்த்தம் நிச்சயம்செய்வதுநலமென்றார்கள. அவ்விதமே ஒரு வருஷம் சென்றவுடன் மருமகன் பி. ஏ. பரிக்ஷையில் முதலில் தேறினான். உடனே சாந்தி முகூர்த்தம் வெகு விமரிசையாக நடந்தேறியது. சாஸ்திரியாரின் மைத்துனர் தமது மருமானுக்கு 10,000 ரூ மஞ்சக்காணியாக கொடுத்தார். சம்பந்திகள் அளவிலா மகிழ்ச்சி கொண்டார்கள். மருமகனும் யோக்யனானபடியால் இவர்களிடத்தில் நற்பெயர் பெற்று வந்து கடைசியில் உயர்ந்த உத்யோகம் பெற்று மனைவியுடன் இல்லறத்தைத் செவ்வனே நடத்திவந்தான்.

(முற்றிற்று.)

☞ விஸ்வாமித்ரர்.

டெல்லி தர்பார்

நமது சக்கரவர்த்தி சக்கரவர்த்தினி விஜயம்.

நமது சக்கரவர்த்தியின் பிரயாணத்தைக் குறித்து 'டெயிலி கிரானிகிள்' என்ற பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—

"நமது சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் தங்கள் பரிவாரங்களுடன் இவ்வருஷம் நவம்பர் மாசம் 14-ந்தேதி லண்டனைவிட்டு டோவருக்குப் புறப்படுவார்கள். டோவரிலிருந்து கப்பலேறி கலேசேர்ந்து அங்கேயிருந்து ரயில் மார்க்கமாய் ஜினோவாவந்து சேர்வார்கள். இத்தலிதேசத்துறை முகமாகிய ஜினோவாவில் நமது சக்கரவர்த்திக்கும சக்கரவர்த்தினிக்கும தயாராய் ஒரு கப்பல் காத்துக்கொண்டிருக்கும்.

இக்கப்பல் பம்பாயிக்கு டிசம்பர் 2-ந்தேதி வந்து சேருமென்றெதிர் பார்க்கப்படுகிறது. சக்கரவர்த்தியையும் சக்கரவர்த்தினியையும் நமது வைசிராய் லார்ட்ஹார்டிஞ்சு பம்பாயில் வரவேற்பார். இரண்டு நாட்கள் பம்பாயில் தங்கின பிறகு, டெல்லிக்கு அவர்கள் ஸ்பெஷல் வண்டியில் புறப்பட்டு 7-ந்தேதி டெல்லியைச் சேர்வார்கள். 10-தினங்கள் டெல்லியில் தாமதம் செய்வார்கள். 12-ந்தேதி தர்பார் நடக்கும். இதன் மத்தியில் நமது இந்து இராஜாக்கள் செய்யும் மரியாதையை அங்கிகரிப்பார்கள். ஒரு நாளோ, இரண்டு நாளோ, இருவரும் போலோ மாட்சுக்குப் போவார்கள். டிசம்பர் 16-ந்தேதி பரிவாரத்துடன் வேட்டை நிமித்தமாக சக்கரவர்த்தி நேபாளத்துக்குப் போவார்கள். இதில் 10,12 நாட்கள் கழியும். இதனிடையே நமது சக்கரவர்த்தினி முக்கியமான சில ஸ்தலங்களை பார்கப போவார்கள். கல்கத்தாவில் 30-ந் தேதி இருவரும் வந்து சேர்ந்துவிடுவார்கள். 1912-ம வருஷம் ஜனவரிமாசம் முதல்தேதி கல்கத்தாவில் மிலிடரி சைந்நியக் காட்சி நடக்கும்.

ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் முடிசூட்டு வைபவ சம்பந்தமாய் டெல்லியில் நடக்கப்போகும் தர்பாருக்கு விஜயம் செய்யும் பிரபுக்கள், காமன்ஸ் சபை மெம்பர்கள் முதலானவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வதற்காக ஒரு பார்லி மெண்டரி கமிட்டி நியமிக்கப்படப் போவதாக அறிகிறோம்."

ஜயதேவீ.

ஜயதேவி ஒருராஜபுத்திரி. மிகஅழகுவாய்ந்தவள். புத்தியுமுண்டு. இவள் தகப்பனார் இவள் சிறுவயதாயிருந்தபோது சிறந்த உபாத்தியாயர்களை நியமித்து இவளுக்குப் போதித்து வரும்படி ஏற்பாடு செய்தார். அப்படிச்செய்தமையால் இவள் சமஸ்கிருதம், மராட்டி, இந்திபாஷைகளிலுள்ள சிறந்த நூல்களைக் கற்று தெய்வபக்தி, பெரியோர்களிடத்தில் மரியாதை, ஜீவகாருண்யம், தருமம், இராஜாங்க விஷயம் முதலிய விஷயங்களை அறிந்து அவைகளின்படி நடந்து வந்தாள். யாவரும் ஜயதேவியைக் கண்டு நமது தேசத்து மஹாலக்ஷ்மி தான் அவதாரம் எடுத்து வந்தாள் என்று பூரித்திருந்தார்கள். இவளது தகப்பனார் டெல்லி சக்ரவர்த்தியால் சிறையில் வைக்கப்பட்டார். இவர் சித்தூர் ராஜபுத்திர அரசர். தமது தகப்பனார் இவ்விதம் செய்யப்பட்டதைக் குறித்து மிக வருத்தி கண்களில் நீர்ததும்ப ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றாள் ஆயினும் தனது ஹிருதயத்தில் பொங்கி வருகின்ற துக்கத்தை வெளிக்குக் காட்டாமல் உள்ளேயே அடக்கிக்கொண்டு, தைரியமாய் தனது பணிவிடைக்காரிகளுடன் ஒரு மூடுவண்டியில் ஏறிக்கொண்டு, தமது அருமைத் தகப்பனாரைக்கண்டு சிறையினின்று அவரை விடுவிக்க யோசனை செய்ய புறப்பட்டாள். ஜயதேவி குழந்தையாயிருக்கும்பொழுதே இவளது தாயார் இறந்துவிட்டாள். இவளது தகப்பனார் இவளை மிக்க அன்புடன் இவள் மனது கோணவண்ணம நடத்தி வந்தார். திரவியமிருந்தும் ஒரு புத்திரி நமக்குப்போதும் என்று தீர்மானித்து மறுவிவாகம் அநேகர் செய்துகொண்டபோதிலும் இவர் செய்துகொள்ளவில்லை. இதனால் ஜயதேவியிடத்தில் ஆழ்ந்தஅன்பு இவருக்கிருந்ததென்பது இதனால்விளங்குகின்றதல்லவா?

ஜயதேவீ சில ஆட்களுடனும், பணிவிடைப் பெண்களுடனும் சித்தூரை விட்டுப்புறப்பட்டு, காட்டுவழியாகச் சென்றாள். மழை வந்துவிட்டது. தங்க இடம் எங்கு தேடியும் தென்படவில்லை. கடைசியாக மலையடியில் ஒரு குகை தென்பட்டது. விளக்கை எடுத்துக்கொண்டு அக்குகையினுள் சிலர் சென்று பார்க்கவே, அது பெரிதாகவும், விஸ்தாரமுள்ளதாகவும் தென்பட்டது. எல்லாரும் வண்டியையும் மாடுசளையும் வெளியில் விட்டுவிட்டு உள் சென்று மழைக்குத் தங்கினார்கள். குளிர் அதிகமாயிருந்தமையால் நெருப்பு மூட்டி குண்டம் வைத்துக்கொண்டிருந்தார்கள். இதனால் பாழடைந்தகுகைக்குள துஷ்டமிருகங்கள் வரபயமடைந்து அங்குமிங்கும்ப துங்கிக்கொண்டிருந்தன. மழையோ சாயங்காலம் நின்றுவிட்டது. காடு முழுமையும் காரிருள சூழ்ந்திருந்தது. இவர்கள் வெளியிற் போக வகையின்றி அன்றிரவு போஜனத்தை அங்கேயே செய்து போஜனமுண்டு நித்திரைக்குச் செல்லும் சமயத்தில் ஒருவன் திடீரென்று உள்ளே வந்து சுற்றியாவறறையும் பாரத்த பின் வெளிச்சென்று விட்டான். இவன் ஒரு மகமதியன். இவன அலாவுடீன் சக்ரவர்த்தியின்தூதன். இராஜபுத்திரவீரர்களும் சைனியங்களும் இங்கு தங்கியிருக்கிறார்களா என்பதை யறியவந்தான். வந்தவன் சங்கதி இன்னதென்று தெரிந்துகொண்டு வந்த வழியைப்பார்த்துக்கொண்டு வேகமாய் ஓடி 100 கஜதூரத்திலுள்ள சிப்பாய் தலைவருக்கு தான் கண்டதை யெல்லாம் சொன்னான். அவர்கள் உடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு இங்கு வந்து உள்ளே நுழைந்தார்கள்.

ஜயதேவி "இவர்கள தைரியமாய் உள்ளே வந்ததைக் கண்டு நாம் இனி ஒரு நிமிஷங்கூட தாமதித்து தங்கியிருக்கக்கூடாது என்று எண்ணி தனது பரிவாரங்களைக் கூப்பிட்டு நாம் வெளியிற் செல்லுவோம். நாம் இனி இங்கிருக்க யோச்யதை யன்று. இங்கு வந்திருப்பவர்களுடன் நாமும் சேர்ந்திருப்பது நமது மதக்கொள்கைக்கு விரோதம்;அவர்களே யிங்கிருக்கட்டும். நாம் வெளியிற் சென்று புறப்படுவோம்" என்றாள். அவ்விதமே ஜயதேவியும் அவளைச் சேர்ந்தவர்களும் அவ்விடத்தைவிட்டகன்று வண்டி யிருக்குமிடத்திற்கு வந்து வண்டியைக் கட்டும்படி வண்டிக்காரனுக்கு ஜயதேவி உத்திரவு அளித்தாள் வண்டிக்காரன் மாடுகளைக்கொண்டு வந்து வண்டியில் கட்டி உள்ளே மெத்தை சரியாக யிருக்கிறதாவென்று பார்த்தான்.

மகமதிய சக்கிரவர்த்தியின் உத்தியோகஸ்தர்களிலொருவன் சில சேவகர்களுடன் இங்கு வந்திருக்கிறான். இவன நம்மை எகாவது செய்தாலும் இம்சிக்கலாமென்று ஒரு வேலைக்காரி சொன்னாள்.

ஜயதேவி "விரோதிகளாயிருந்தாலும்,ஸ்திரீ ஜாதியை இம்சிக்கமாட்டார்கள்" என்றாள்.

உடனே மகமதிய உத்தியோகஸ்தன் வண்டியைப் பார்த்து, "யார் இங்கிருக்கிறது" என்றான்.

ஒரு வேலைக்காரன் 'ஐயா, ஒரு ஸ்திரீ' என்றான்.

மகமதிய உத்தியோகஸ்தன் "வண்டியை மூடியுள்ள துணியை எடுத்து உள்ளிருப்பவர்களைப்பார்க்கத் துணிந்தான். வேலைக்காரன் அவ்விதம் செய்யக்கூடாதய்யா என்றான். இதைக்கேட்காமல் முரட்டுத்தனமாய் துணியை எடுத்துப்பார்க்க முயலவே, வேலைக்காரன் பலவந்தமாய் அவனைப்பிடித்து தள்ளினான். உத்தியோகஸ்தன் கோபமூண்டு தனது உரையிலிருந்து கத்தியை எடுத்து அவனை வெட்டப்போனபோது வேலைக்காரன் கையில் காயம் பட்டது. இச்சங்கதி தெரிந்துகொண்ட ஜயதேவி திடீரென வெளியிற் குதித்து, "ஐயா, என் பெயர் ஜயா, ராய்ரதம்சேன் என்ற ராஜாவின் புத்திரி, அவரை உங்களது சக்ரவர்த்தி சிறையில் வைத்திருக்கிறார்' என்றாள்.

உத்தியோகஸ்தன் இவைகளைக் கேட்டவுடன், கத்தியைக் கீழே நழுவ விட்டு, மதிமயங்கி ஒன்றும் தோன்றாமல் ஆச்சரியத்துடன் முழங்காலிட்டு நின்று, "ஓ, மாதரசே ! நாம் சந்தித்தது அதிர்ஷ்டமே. நாங்கள் உம்மை தினம் எங்கும் தேடிவருகிறோம். தாங்கள் எங்களது சக்ரவர்த்தியின் அந்தப்புரத்திற்கு வந்துவிட்டால் தங்களது அருமையான தகப்பனார் விடுதலை யடைவார்" என்றான்.

"நான் மராட்டிய ராஜபுத்திரி என்பது தங்களுக்குத் தெரியுமே. உமது அரசர் மனிதற்குள்ள தயாளகுணத்தை யடைந்திருந்தால், ஒரு சிறிய பெண்ணை—அநாதைப்பெண்ணை—பிடித்து வரும்படி செய்யமாட்டார். நானோ விவாகமாகாதப்பெண். நான் எங்கள் சாஸ்திர விதிப்படி இந்து ராஜன் எவனையாவது மணம்புரிவேனே யொழிய மகமதிய சக்கரவர்த்தியை மணம்புரியமாட்டேன். மேலும் எனக்கு மாத்திரமல்ல—எனது தகப்பனாருடைய ராஜ்யத்திற்கும் விரோதியாயுள்ளவனை—மணம்புரிய என் மனம் சகிக்காது. அலாவுதீன் தனக்கு வணங்கி மரியாதை செய்யாதவர்களை சிநேக பான்மையோடு தன்னோடு இருக்க என்தேடுகிறான்? நீயாவது தயாள குணமுடனிருந்து என்னைப்போகும்படி விட்டுவிடு" என்றாள்.

ஓ மாதரசே! நான் எப்படியும் ஊழியக்காரன். சக்கரவர்த்தியின் ஆக்ஞைப்படி நடக்கவேண்டியவன். உம்மைப்போகும்படி விட்டால் நான் ராஜ விசுவாச மற்றவனுவேன். என் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் எதையும் செய்யத்துணியேன்" என்ருன் உத்தியோகஸ்தன்.

ஜயதேவி "நியாயமாயிருப்பது மனிதனது முக்கியகடமை. ஒரு சுயேச்சையாயுள்ள ஸ்திரீயின் சுதந்தரத்தை அபகரிப்பது சரியன்று. துஷ்டர்களுடைய சட்டதிட்டங்கள் யோக்யர்களுக்கு சரிப்படாது. அவர்கள் அவ்வித நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடக்கவும் கூடாது. நியாயப்படிச் செய்வது தான்சிறந்த தர்மமாகும்".

உத்தியோகஸ்தன்: இப்பொழுது நின்றிருந்த மழையும் ஆரம்பித்துவிட்டது. நாம் நாளைக்காலையில் இவ்விஷயத்தைப்பற்றி பேசிக்கொள்வோம் என்று தனது ஆட்களில் சிலரை இவர்களுக்கு காவலாக வைத்துவிட்டு தான் போஜனமுண்டு நித்திரை செய்யப்போனுன்.

ஜயதேவியும் வண்டியிலேயே அவ்விரவைக் கழித்தாள்.

மறுநாள் காலையில் மகமதிய உத்தியோகஸ்தர் தமது சேனையுடன் ஜயதேவியிடம் வந்து வண்டியைக்கட்டி நடத்த உத்திரவளித்தார்.

ஜயதேவி "நான் உங்கள் சக்ரவர்த்தியின் கைதியா ?"

உத்தி: "தாங்கள் எப்படி வேண்டுமானுலும் நினைத்துக் கொள்ளலாம்.

சிறிது தூரம் வண்டி சென்றது. மாடுகளைப் புதிய ஆட்கள் ஓட்டத் தலைப்பட்டமையால் மாடுகள் இடக்குசெய்ய ஆரம்பித்தன ஆட்கள் மாடுகளைக்கோபத்துடன் அடித்தார்கள். இவர்கள் அடிக்கு அசையவில்லை.

உத்தியோகஸ்தர் உடனேவந்து, "ஓ! மாதரசே! மாடுகள் சண்டித்தனம் செய்கின்றமையால் சிறிது தூரம் நடந்து வாருங்கள்" என்ருன்.

ஜயதேவி:—"நான்நடந்துவரமுடியாது.என் மாடுகள்சண்டித்தனம்செய்ததற்குக்காரணம் புதிய மனிதர்கள் கண்டபடி அவைகளை அடித்ததே.எனது ஆட்கள் வண்டியில் உட்கார்ந்தால் மாடுகள்யாதொரு இடைஞ்சல்செய்யாமல் வேகமாகப்போகும்."

உத்தியோகஸ்தரும் சம்மதிக்கவே, ராஜபுத்திரியின் ஆட்கள் வண்டியில் உட்கார்ந்தவுடன் மாடுகள் வேகமாய்போக ஆரம்பித்தன. வெகுதூரம் யாவரும் போய்க்கொண்டிருக்கும் பொழுது ஒரு சைனியம் இவர்களுக்கெதிரில் வருவதைக்கண்டார்கள்.கிட்டநெருங்க நெருங்க, ராஜபுத்திர சைனியமெனத் தெரிந்து, ஜயதேவியையும் அவள் ஆட்களையும் சாக்கிரதையாக கார்த்துவர ஏற்பாடுசெய்து யுத்தத்திற்கு ஆயத்தமாயிருந்தார்கள். ராஜபுத்திர சைனியம் சமீபத்தில் வந்தது. சேனைத்தலைவன் உத்தியோகஸ்தரைப் பார்த்து "உங்களிடத்திலுள்ள கைதிகளைவிடுதலை செய்கிறீர்களா, மாட்டீர்களாவென்று கம்பீரத்துடன் கேட்டான். மகமதிய உத்தியோகஸ்தர் மறுதளிக்கவே இரு கட்சிக்கும் பலத்தயுத்தம் நடந்தது. மகமதிய உத்தியோகஸ்தர் கொலையுண்டார். சிலர் காயமடைந்தார்கள். அநேகர் ஓடிப்போய்விட்டார்கள்.

ராஜபுத்திரசேனைத்தலைவன் கைதிகளைப்பார்க்கும்போது ஆச்சரியமடைந்தான்.குதிரையினின்று ஒரு குதிகுதித்து எனது பிரியமுள்ள ஜயா, நீ இப்பொழுது காப்பாற்றபட்டாய். நீ திடீரென்று புறப்பட்டுப்போனதைக் கேட்டதும் எனக்குண்டான கவலைக்கு அளவேயில்லை. நீ புறப்பட்டுபோன வழியைக் கேட்டுக்கொண்டு வந்தமையால் எதிரிகளைக்கொன்று உன்னைத் தப்புவிக்கும்படிநேர்ந்தது. இது கடவுள் அனுக்கிரகம் தான் என்ருன்.

ஜயதேவி: மிக ஆநந்தங்கொண்டு ஜெய்பால்! உன்னைக்கண்டதே எனக்கு தேவலோகம்போல தோன்றுகிறது! எனது மானத்திற்கு கெடுதி வராவண்ணம் பாதுகாத்துவந்தேன். அப்படிவரும் போலிருந்திருந்தால் என் உயிரையும் மாய்த்துக்கொள்ள தயாராயிருந்திருப்பேன்; என்னை நீ காப்பாற்றினாய். நாம் இனி இங்கு தங்கவேகூடாது, புறப்படலாம்.

ஜெய்பால்: ஆம் உண்மைதான் என்று புன்சிரிப்புடன் சொல்லி ஜயதேவியையும், மற்றவர்களையும் வெகு பத்திரமாய் இட்டுக்கொண்டு தனது சைனியத்துடன் புறப்பட்டுப் போனான்.

☞ தாதா.

பத்திராதிபர் குறிப்பு.

சுவாமி விவேகானந்த இந்து பாலிகா சங்கம்.

இது ஒருஞ்சேரியிலிருக்கிறது. இதன் முதல்வருஷோற்சவம் வெகுவிமரிசையாக நடந்தேறியது அச்சமயத்தில் அநேக மாதர்களும், சில கன்வான்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீமதி அலர்மேல்மங்கையம்மை சபைத் தலைமையை வகித்து பெண்களுக்கு ஆண்களைப்போல கல்வி அவசியமென்றும், தாய்மார்கள் தங்கள் புத்திரி புத்திரர்களை நடத்தவேண்டிய வழி, வீட்டுவேலை, சங்கங்களாலுண்டாகும் நன்மை முதலிய விஷயங்களைப்பற்றியும் வெகு நன்றாக உபந்நியாசம் செய்தார்கள். பெண்மணிகள் எழுதிவாசித்த வியாசங்களைக் கேட்டவர்கள் மகிழ்ந்தார்கள். காரியதரிசி யோகாம்பாள் என்னும் பாலிகை சங்கத்திற்கு ஒவ்வொருவரும் உதவிபுரிய முன் வரவேண்டுமென்றும், பாலிகா பாடசாலைக்கு அநேகர் இன்னும் உதவிபுரிய வராதது விசனிக்கத்தகுந்ததென்றும் சொன்னது உசிதமாயிருந்தது. இச்சங்கம் இன்னும் விருத்தியடைய ஈசன் அருள்புரிவாராக.

சென்னையில் கூடிய ஆசார சீர்திருத்தசபை.

இச்சபை விக்டோரியா மண்டபத்தில் கூடிற்று. அச்சமயத்தில் ப்ரொபஸர் லக்ஷ்மிநரசு நாயுடு அவர்கள் சபைத் தலைமையை வகித்தார். பெண்கல்வியைப் பரவச்செய்யவும் உயர்தரப்படிப்பு பெண்களுக்குப் வீட்டிலேயே புகட்டிவரத்தக்க ஏற்பாடுசெய்யவும், கவர்ண்மெண்டார் பெண் பாடசாலைகளுக்கு கொடுக்கும் பணம் வெகு சுவல்பமாயிருப்பதால் பெண் கல்விக்குத் தடையென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விஷயமாக ஸ்ரீமதி அலமேலுமங்கை ‘படித்தபெண்கள் எப்பொழுதும் தங்கள் கணவர்களுக்கு பற்பலவிதங்களில் உதவிபுரியக் கூடுமென்றும், கிரககிருத்தியத்தில் சாமர்த்தியமுள்ளவளாயும், குழந்தைகளைப் பழக்குவதில் நல்ல தாய்மார்களாகவுமிருப்பார்கள். படித்தபெண்கள் கெட்டால் அவர்களது படிப்பாலல்ல, ஆனால் சுயமான குணத்தால் தான். ஆகாரம் எப்படி தேகத்திற்கு அவசியமோ அவ்விதமே கல்வியும் மூளைக்குத்தேவை. படிப்பில்லாத மனைவிகளையுடையவர்களுக்கு உண்மையான சந்துஷ்டிகிடையாது. படிப்பால் அவர்கள் கெட்டுப்போய் விடுகிறார்களென்று நினைத்தால் தங்களையே கெடுத்துக்கொள்பவராவர்களென்று” சொன்னார்கள்.

விவாக வயதை உயர்த்தவேண்டுமென்ற தீர்மானம் ம-ா-ா-ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியாரால் பிரேரேபிக்கப்பட்டது. ப்ரவடையான பின் பெண்களுக்கு விவாகம் செய்வதில் யாதொரு தோஷமில்லையென்றும்,பெண்

கள் சுகாதார விதிப்படி 16 அல்லது 18 வயதில் தாய்மார்களாகக் கூடாதென்றும் சொன்னார். மிஸ்டேனன்ட் என்ற கல்கத்தா மாதுபெண்களுக்கு படிப்பு வரவேண்டுமானால் 12 வயதிலும், பிள்ளைகளுக்கு 20 வயதிலும்விவாகமும், சாந்திமுகூர்த்தம் 16, 20 வயதிலும்செய்யப்படவேண்டும்என்றார்கள். கிழவர் சிறுபெண்களை விவாகம்புரியக் கூடாதென்றும், 45 வயத்துக்கு மேல்பட்டவர்கள் 16 வயத்துக்குக் கீழுள்ள பெண்களை மணம்புரியக்கூடாதென்றும், வரசுல்கம் கன்னியா சுல்கம் என்ற பெரும் தொத்து வியாதி கற்றறிந்தவர்களுக்குள்ளும் பரவி வருவது விசனிக்கத்தகுந்ததென்றும், இவைகளையும நிறுத்த வேண்டுமென்றும், விவாகச் செலவை குறைக்கவேண்டுமென்ற தீர்மானத்தை ம-ா-ா-ஸ்ரீ கே. ஏகாம்பர ஐயரவர்கள் பிரேரேபித்தார்கள். பின் கைம்பெண்களின் ஸ்திதி, நேட்டாலுக்குப்போகும் கூலியாட்கள் (Civil Marriage Bill) புதியவிவாக சட்ட மசோதா,முதலியதீர்மானங்கள் செய்யப்பட்டன.

18-வது சென்னை மாகாணக்கூட்டம்

மேமீ 8உ 12-மணிக்கு 18-வது சென்னை மாகாணக் கூட்டம் விக்டோரியா டௌன்ஹாலில் கூடிற்று. ஆரம்பில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் உபசரணைக் கமிட்டி சேர்மானாயிருந்து வந்திருந்த டெலிகேட்டுகளை வரவேற்றார். கும்பகோணத்தில் இப்போது பென்ஷன் பெறும் மிஸ்டர் V. K. ராமானுஜாசாரியார் கான்பெரென்ஸ் தலைவராய்த் தெரிந்தெடுக்கப்பட்டார். இரண்டு பேரும் வழக்கம்போல் பிரசங்கம் செய்தார்கள்.

மிஸ்டர் ராமானுஜாசாரியார் தமது பிர்சங்கத்தின் ஆரம்பத்தில் "மகாராஜா முடிசூட்டுக்கு இந்தியாவுக்கு வருவதைப்பற்றிச் சந்தோஷத்தைத் தெரிவித்துவிட்டு, இப்போது ஜனங்கள் கவனத்தைக் கவர்ந்துகொண் டிருக்கும் பல விஷயங்களைப் பற்றிப பிரஸ்தாபிக்கப் புகுந்தார். மகமதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் உண்டாயிருக்கும் வித்தியாசம், தாழ்ந்த வகுப்பாரை உயர்த்துதல்,சாதாரண ஜனங்களுக்குள் படிப்பு,கவர்ன்மெண்ட் உத்தியோகங்களில் இந்தியர்கள், லான்ட் ரெவினியூ ரெவிஷன்கள், ஐக்கிய நாணயச் சங்கங்கள், தென்னாபிரிக்காவில் இந்தியர்களின் நிலைமை, கிராமப் பஞ்சாயத்து முதலிய ஸ்தல ஸ்தாபனங்கள், இவைகளையும் இன்னும் சில விஷயங்களையும் பற்றி விவகரித்துப்பேசி" தமது அபிப்பிராயத்தைச் சொன்னார். பின்பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

☞ பத்திராதிபர்.

முடிசூட்டு வைபவம்.

ஜியார்ஜ் சக்கரவர்த்திக்கும், மேரி சக்கரவர்த்தினிக்கும் நடக்கப்போகும் முடிசூட்டு வைபவத்தை முன்னிட்டு நியூஜீலண்டு வாசிகள் 285 அவுன்ஸ் நிறையுள்ள தங்கக்கட்டி ஒன்றைச் சுரங்கத்திலிருந்து வெட்டி எடுத்தபடியே சக்கரவர்த்தி, சக்கரவர்த்தினிக்கு வெகுமதியாக அனுப்பியிருக்கிறார்கள். நியூஜிலண்டு சுரங்கத்தில் இதுவரையில் இவ்வளவு பெரிய தங்கக்கட்டி கிடைத்ததே கிடையாதாம். இதுதான் மிகப்பெரிதாம்.

மேமீ 25௳ ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும் கொலு மண்டபத்தில் அமர்ந்து பிக்கானீர் மகாராஜா கூச்பீகார் மகாராஜா முதலானவர்களை வரவேற்று உபசரித்தார்கள்.

பாடியால மகாராஜாவும் தமது குடும்பசகிதம் லண்டன்மாநகருக்குச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. இவர் அளவற்ற விலையுயர்ந்த நகைகளு[illegible]ருக்கிறாராம்.

“ஷெப்பர்டு புஷ்” என்னுமிடத்தில் வைக்கப்படப்போகும் முடிசூட்டுப் பொருட்காட்சிக்கு அநேக படங்களை இரவலாக்க் கொடுப்பதாக அலக்ஸாந்திரா மகாராணி வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். எட்வர்டு மகாராஜா, வேல்ஸ் இளவரசராக இருந்தபோது இந்தியச்சுற்றுப் பிரயாணம் செய்ததின் விவரங்களடங்கியவையாம் இப்படங்கள்.

முடிசூட்டு வைபவத்திற்கு ராணுவப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தனுப்பும் விஷயம் தீர்மானமாகிவிட்டது. கானடாவிலிருந்தும், குடியேற்ற நாடுகளிலிருந்தும் மொத்தத்தில் ஆயிரத்து முன்னூறு ராணுவ உத்தியோகஸ்தர்கள் பிரதிநிதிகளாய் வருவார்கள். இவர்களுள் எழுநூறு பேர் கானடியர்களாயும், நானூறு பேர் தென்னாப்பிரிக்கர்களாயுமிருப்பார்கள்.

ஜெர்மன் சக்கரவர்த்தியின் புத்திரியாகிய விக்டோரியா லூயி என்பவரும், மேரி சக்கரவர்த்தினியும் மேமீ 17௳ புறப்பட்டு லண்டனிலுள்ள முக்கியமான இடங்களைப் பார்வையிட்டார்கள். விக்டோரியா லூயி லண்டனுக்கு விஜயஞ்செய்தது இதுதான் முதல்தடவையாதலால், மேரி அரசியார் அவருக்கு இவைகளைக் காண்பித்தாராம்.

ஜியார்ஜ் சக்கரவர்த்தியும் மேரி சக்கரவர்த்தினியும் “டொமீனியன்ஸ் கிளப்”புக்கு மேமீ 13௳ விஜயம் செய்தார்கள். கானடாமுதலிய தேசங்களிலிருந்துவந்த டெலிகேட்டுகள் எல்லோரும் அங்கே கூடியிருந்தார்கள். லார்டு ஸ்ட்ராத்கோனா, ஸர் ஜோஸப், லேடி வார்டு முதலானவர்களும் வந்திருந்தார்கள். முடிசூட்டு வைபவக் காட்சியைச் சக்கரவர்த்தி திறந்தபோது உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் தந்திகள் வந்தன. லார்டு கிளாட்ஸ்டனும் லார்ட் ஹார்டிஞ்சும் அவ்விதம் தந்தியனுப்பினவர்களுள் முக்கியமானவர்கள்.

முடிசூட்டு வைபவ உற்சவக்கொண்டாட்டம் மேமீ 12௳ முதல் ஆரம்பித்தது. ஜியார்ஜ் சக்கரவர்த்தியும், மேரி சக்கரவர்த்தினியும், வேல்ஸ் இளவரசரும், இளவரசியும் உயிர்க்காவலர்கள் புடைசூழ பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து புறப்பட்டு, கிரிஸ்டல் அரண்மனைக்குச்சென்று முடிசூட்டு வைபவ ஆரம்பக்காட்சியைத் திறந்தார்கள். சைனியங்களும், ஸ்கூல் பிள்ளைகளும் ராஜகுடும்பத்தார் சென்ற வழியெல்லாம் நிறைந்திருந்தார்கள். கிரிஸ்டல் அரண்மனையில் சக்கரவர்த்தி நுழைந்ததும், எல்லோரும் சந்தோஷத்தோடு ஆர்வாரஞ்செய்தார்கள். மந்திரிமார்களும் தெள்த்யாதிகாரிகளும், ஹைகமிஷனர்களும் இன்னும் பல பிரபலஸ்தர்களும் விஜயஞ்செய்திருந்தார்கள்.

ஷெப்பர்ட்ஸ் புஷ் என்னுமிடத்தில் மேமீ 18உ காஞட்டுக் கோமகு வின் புத்திரர் பிரின்ஸ் ஆர்தர் முடிசூட்டுப் பொருட்காட்சியைத் திறந்தார்.

லண்டனில் நடைபெறும் ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் முடிசூட்டு வைபவத்தின்போது குவாலியர் மகாராஜா, பிகானிர் மகாராஜா, பாடியாலா மகாராஜா முதலான தேசமன்னர்கள் விஜயஞ்செய்திருப்பார்கள். இந்த மன்னர்கள தங்கள் தங்களுக்கு உரிமையான உயர்ந்த ஆடை ஆபரணங்களை அச்சமயம் அணிந்து கொள்ளுவார்களாம். இந்தத் தேசமன்னாகளுக்குச் சொந்தமான விலைமதிக்கமுடியாத ஆபரணங்கள் பம்பாய் வழியாய் லண்டனுக்கு மிகுந்த காபந்துடன் சென்ற சிலவாரங்களாய்ப் போய்க்கொண்டிருக்கின்றன. பாடியாலா மகாராஜாவின் ஆபரணங்கள் மட்டும் 50 லட்சம் ரூபாய்க்கு மேல் பெறக்கூடியவை ஒரே தடவையில் லண்டனுக்கு அனுப்பப்பட்டன. கிரேட் வெஸ்டர்ன் ஹோட்டலில் இவைகளை வைத்துப் புகைப்படம் பிடித்தார்களாம்.

POPULAR LECTURES FOR TEACHERS EMPLOYED IN ELEMENTARY SCHOOLS.

PHYSICS (3).

A. எண்ணல், எடுத்தல், முகத்தல் அளவைகள்.

(1) எண்ணுதல் எளிது: பரும்படியானது. நீட்டல் அளவை: அளவுகோல்கள். சதுர அளவை. கன அளவு கண்டுகொள்ளும் சாதாரண வகைகள். முகத்தல் அளவை: முத்திரை படிகள். எடைபோடுதல், எல்லா வஸ்துக்களுக்கும் உபயோகிக்கலாம். இதன் உபயோகங்கள்.

(2) எடை சாமானின் சுபாவத்திற்குத் தக்கபடியும் அதன் பரிமாணத்திற்குத் தக்கபடியும் மாறுபடுதல். சாமான்களின் அழுத்தம்(density). தராதர அழுத்தம் (relative density). மொத்த எடையை கணக்கிடும் எளிதான வழி.

(3) சாதாரணத்தராசு. அதன் அங்கங்கள். தராசுக்கட்டையின் இலக்ஷணங்களின் நிரூபணம். தப்பிதமான தராசுகள். சரியான எடையை கண்டுகொள்ளும் விதம்.

(4) ஒரு தட்டுத் தராசுகள். ரயில்வே தராசு. தூக்கு கயிற்றுத் தோல். முறுக்குக் கம்பித்தராசு.

B. பளுவைத் தள்ள உபயோகிக்கும் உதவி கருவிகள். மூலயந்திரங்கள்: இவற்றின் உபயோகம்.

(1) நெம்புகோல்கள்: ஏற்றமரம், கட்டப்பாரை, பாக்குவெட்டி.

(2) கப்பிகள் (pulleys). அச்சுடன் சேர்ந்த சக்கரங்கள். சகதியும் பாரமும்.

(3) சாரங்கள் (inclined planes). சரிவுக்குத் தக்கபடி கஷ்டம்மாறுதல். கவலைக் கிணறுகள். சரிவு ரஸ்தாக்கள். கட்டடச் சாரங்கள், ஆப்புகள், கத்திகள்.

(4) திருகாணிகள் (screws). ரயில்வேயில் உபயோகிக்கும் 'ஜாக்' யந்திரம். பைண்டர் பிரஸ்.

சமாச்சாரக் குறிப்பு.

நாலு தூமகேதுக்கள் இவ்வருஷம் தோன்றுமாம்.

டெல்லி டர்பார் நடக்கும் இடம் கூடாரம், சைனியம், முதலியவைக ளின் படத்தை நமது ஜார்ஜ் அரசர் பார்த்துவருகிறாராம்.

டெல்லி டர்பார் நடக்கும்போது சுமார் சேனையைச்சேர்ந்த 11,000 அல்லது 12,000 ஜனங்கள் (சிப்பாய்கள்) அங்கு விஜயம் செய்வார்களாம்.

பட்டாபிஷேக சமயத்தில் 700-வருஷங்களுக்கு முன் செய்த நாற்காலி யில் நமது சக்கரவர்த்தி ஜார்ஜ் உட்கார்ந்து அச்சடங்கை செய்துகொள் வாராம்.

மோர்பஞ்ச மகாராணி இங்கிலாந்திருக்கிறாள். இம்மகாராணியின் குமார த்திக்கு இங்கு நாமகர்மம் சடங்கு வெகு விமரிசையாக நடந்ததாம். குழந் தைக்கு ஜயரதி மேரி என்ற பெயரிடப்பட்டதாம்.

ஜாவாத்தீவில் பறக்கும் தவளைகளிருக்கின்றன. அவைகளின் மேல்புறம் பச்சைநிறமுள்ளதாயும், வயிறு வெண்மையாயும், கால்களுக்கிடையிலுள்ள பறப்பதற்கேற்ற மெல்லிய தோல்கள் மஞ்சள் நிறமாயுமிருக்கின்றன. இதே மாதிரியாகப்பறக்கும் அணில்களும் இருக்கின்றனவாம்.

பிரஞ்சு யுத்த மந்திரியின் மரணம்:—ஆகாய விமானத்தினால்கெடுதிகளு முண்டு. இதிலிருந்து பிரஞ்சு யுத்த மந்திரி விழுந்து உயிர் துறந்ததாக சமாச் சாரம் எட்டுகிறது. அநேக ராஜாக்கள் அநுதாபத் தந்திகள் இவர் குடும்பத் துக்கு அனுப்பினார்கள்.

மேமீ 25உ பக்கிங்ஹாம் அரண்மனையில் நடந்த ப்ரீவி கவுன்சில் மீட்டிங்கின்போது இந்தியா மந்திரியின் ஆபீஸ் முத்திரையை ஜியார்ஜ் சக் கரவர்த்தி லார்டு க்ரூ வசம் ஒப்புவித்துவிட்டார். லார்டு க்ரூ தம்முடைய இந் தியாமந்திரி வேலையை ஒப்புக்கொண்டுவிடுவார்.

குவாலியர் மகாராஜா டெல்லிடர்பார் கமிட்டிக்கு 400 தேர்ந்த வேலைக் காரர்களை அளித்திருக்கிறாராம். டெல்லிடர்பார் கூடுவதற்குள் அம்மண்ட பத்தைச் சுற்றிலும் அழகான புஷ்பச்செடிகளையும், நூதன அழகான செடி கொடிகளையும் வைத்து வளர்க்கப்போகிறார்களாம்.

ஆமதாபாத்தில் சமீபகாலத்தில் ஒரு பார்சிய கனவான் 15 ஆயிரம் ரூபாய் நன்கொடையளித்து பார்சிப் பெண் பாடசாலை ஒன்றுபுதிதாய் ஸ்தா பித்தார். இப்பாடசாலையில் மதக் கல்வி போதிக் கப்படுவதற்காகச் சிங்கப் பூர் வாசியாகிய ஓர் பார்சி கனவான் 8ஆயிரம் ரூபா நன்கொடையாகக் கொடு த்திருக்கிறதென கேள்விப்படுகிறோம்.

இலவச கல்வி மசோதா:—கோகலேயின் பிரதம இலவச கல்வி மசோதாவைப்பற்றி இந்தியாவிலுள்ளவர்களெல்லாம் யோசித்துவருகிறார்கள். சென்னை முனிசிபாலிடியார் 40 பாடசாலைகளை ஸ்தாபித்து இனாமாகக் கல்வி போதித்து வரப்போகிறார்கள். மற்றவர்களும் கூடிய சீக்கிரத்தில் முடிவுக்கு வந்து இனாமாக நமது தேசத்துப்பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கல்வி புகட்டி வருவார்களென்று நம்புகிறோம்.

இந்து விவாகச்சபை:—சென்னையில் "இந்து விவாகச்சபை" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தக்க கனவான்கள் கமிட்டி மெம்பர்களாகவும் காரியதரிசிகளாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பிட்டாபூர் மகாராஜா அவர்கள் இச்சபைக்கு ரூபா 500 கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். விவாகச்செலவு, வரசுல்கம், பெண்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றி இச்சபை கூடியமட்டும் உழைத்து வருமென்று எண்ணப்படுகிறது.

சரித்திர பூர்வமான ஒரு மோதிரம்: மேமீ 18உயன்று 3250 பவுனுக்கு விற்கப்பட்டது. முன்காலத்தில் எலிஜபத் மகாராணியிடம் இந்த மோதிரத்தைக் கொண்டுபோய் காட்டும்படி ஏற்பாடு செய்திருந்தார்களாம். ஆனால் மோதிரம் மகாராணியிடம் போய்ச்சேரவில்லை. அதுமட்டும் மகாராணியிடம் காட்டப்பட்டிருக்கும் பட்சத்தில், லார்டு எஸக்ஸ் மரண தண்டனையிலிருந்து தப்பித்திருப்பாராம். லார்டு மிச்செல்ஹாம் என்பவர் இதை வாங்கினதாகத் தெரிகிறது.

பம்பாய்க் கவர்னராயிருந்த லார்ட் நார்த்கோர்ட்டின் மனைவியார் லேடி நார்த்கோட்டின் பேரால் பாம்பாயிலே 1900-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்ட அநாதைகளின் விடுதி, அந்த வருஷத்தில் 12-அநாதைகளோடு ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அந்த விடுதியில் 175 அநாதைகள் இருப்பதாகவும், அந்த அநாதை கிரகத்துக் கிப்போது 2-லட்சம் ரூபாய் மூலதன மிருக்கிறதென்றும் அறிந்து சந்தோஷிக்கிறோம். அந்த கிரகத்தின் போனவருஷத்துச் செலவு ரூபா 17, 262 எனப்படுகிறது.

ஹிந்துக்களில் வைதீக கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் துளசிச்செடி மலேரியா சுரத்துக்குப் பெரிய வைரி யென்று சொல்லுவது வழக்கமென்றும் அவர்கள் சொல்வது சரியென்றே ருசுவாய் விடும்போ லிருக்கிறதென்றும் கல்கட்டா இங்கிலீஷ்மான் பத்திரிகை சொல்லுகிறது. துளசிச்செடி மூலிகைக்கு இன்ன குணங்களுண்டென்ற விஷயம் இப்போது கவனிக்கப்பட்டு வருகிறதாம். வேப்ப மரத்துக்கும் சுகாதாரத்தைப் பெருக்கக் கூடிய தன்மை யுண்டென்று சொல்லப்படுகிறபடியால் அதனுடைய குண விசேஷங்களைச் சோதிப்பதும் நன்றாகுமென்று அப்பத்திரிகை கூறுகிறது.

சத்தியபாலதேவி என்ற 19-வயதுள்ள பெங்காலி பிராமணப்பெண் இப்போது அமெரிக்காவில் ஹிந்து சங்கீதத்தைப்பற்றி பிரசங்கம் செய்து வருகிறார். அவர் கடைசியாய்ச்செய்த பிரசங்கமொன்றில் சுமார் 5000 வருஷத்துக்கு முன்னால் ஜயதேவர் என்ற மகாரிஷி கீத கோவிந்தம் என்ற சங்கீத சாஸ்திரம் இயற்றினதாகவும், அந்த சாஸ்திரத்தை தாம் நொடேஷனுக்

குறிப்பிட்டு இப்போது தம் வசம் வைத்திருப்பதாகவும் சொன்னார். இந்த நூலையும் கொடேஷனையும் நான் எவ்வளவு ஆயிரம் பொன் கொடுத்தாலும் கொடுக்கமாட்டேன். ஆனால் இதை எந்த அமெரிக்க யூனிவர்ஸிடியிலாவது சொல்லிவைக்க ஏற்றுக்கொள்வார்களானால் சந்தோஷமாய் கொடுப்பேன்' என்றுசொன்னார்.

போபால் பீகம் இப்போது பாரிஸ் நகரத்திலிருந்து லண்டன் நகரம் வந்து சேர்ந்துவிட்டார். அவரைப்பற்றிப் பத்திரிகைகளெல்லாம் புகழ்ந்து எழுதுகின்றன. அவர், பெண்களுக்குள், ஒரு ஆபரணமாய் விளங்குகிறார் என்று "ஸ்டாண்டார்ட்" பத்திரிகை சொல்லுகிறது.

போபால் பீகத்தையும், அவருடைய புத்திரரையும் மே௴ 11௳ அலக்ஸாந்திரா மகாராணி வரவேற்று உபசரித்தார் என்று தெரிகிறது.

போபால் பீகம் நாஹீமுக்கு மே௴ 12௳ புறப்பட்டுப்போயிருக்கிறார். முடிசூட்டு வைபவத்தின்போது லண்டனுக்குத் திரும்புவார் என்றும், அப்போது அநேக இந்தியக் கனவான்கள் அவரை வரவேற்று உபசரிப்பார்கள் என்றும் தெரிகிறது.

பிராமணர்கள் சபை:—பாலக்காட்டில் பிராமணர்கள் சேர்ந்து ஒரு கூட்டம் கூடினார்கள். விவாக காலங்களில் வரசுல்கம் வாங்கக்கூடாதென்றும், ஜாதி உட்பிரிவுக்குள் விவாகம் நடப்பது சாஸ்திர சம்மதமென்றும், பூர்வ மீமாம்ஸம், உத்தரமீமாம்ஸம், ஜோதிஷம், ஆயுர்வேதம், இவைகளைக் கற்பிப்பதற்காகப் பாடசாலை ஸ்தாபிக்கவேண்டுமென்றும், ஜயிலுக்குப்போன பிராமணன் பிராயஸ்சித்தம் செய்துகொண்டால் ஜாதியில் சேர்க்கப்படலாமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன. இவைகளெல்லாம் முக்யமானதுதான். ஜயிலுக்குப்போன பிராமணன் ஜாதியில் சேர்க்கப்படுவது நலமே. ஆனால் சமுத்திர யாத்திரை, புனர் விவாகம் செய்தவர்களையும் ஜாதியில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருந்தால் மிக நலமாயிருக்குமென்பது பலருடைய எண்ணம்.

புதிய விவாக சட்டமசோதா:—இந்துக்கள் விவாக முறை சாஸ்திரோக்தமானதென்று யாவருக்கும் தெரிந்த விஷயம். இப்பொழுது பாபுபேந்த்ரநாத் போஸ் என்பவர் மேற்கூறிய மசோதாவை ஸ்திரப்படுத்தவேண்டுமென்று வைஸிராயின் சட்டசபையில் சொல்லிவருகிறார். இதன்படி ஒரு இந்து மகமதிய ஜாதிப்பெண்ணையோ அல்லது வேறு எந்த ஜாதிப்பெண்ணையாவது விவாகம் செய்துக்கொள்ளலாம். இவ்விதமே இதரசாதியாரும் இந்துப் பெண்ணை விவாகம் செய்துக்கொள்ளலாம். ஆனால் இருவரும் 18 வயதுக்கு மேற்பட்டிருக்கவேண்டும். விவாகமானபின் இவர்கள் தங்கள் தங்கள் மதத்தை அனுசரித்து வரலாம். இவ்வித விவாக சட்டம் ஊர்ஜிதத்திற்கு வந்தால் இந்தியாவுக்கு நன்மையுண்டாகுமென்று பலர் சொல்லுகிறார்கள். சிலர் இது கூடாதென்கிறார்கள். சிலர் இது ஊர்ஜிதத்திற்கு வந்தாலும் கெடுதியுமில்லை, நன்மையுமில்லை என்கிறார்கள்.

ரெங்கூன் கஜட்டில் பின்வரும் யானையின் அறிவைப்பற்றி ஒரு சமாச்சாரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. பர்மாவிலுள்ள மைத்கினவில் யானை

பஹாத்தன் தன் யானையை குளத்திற்கு இட்டுக்கொண்டுபோய் அதற்கு ஸ்நானம் செய்துவைத்தபின் ஆகாரம் தின்குமிடத்திற்கு அதை நடத்திக்கொண்டு நடந்து சென்றான். இவ்விதம் போகும்பொழுது ஒரு புலி ஓடிவந்து இவன்மீது பாய்ந்தது. அச்சமயத்தில் இவனிடத்திலிருந்த ஒரு தடியால் அதன் தலையில் ஓங்கி அடித்து தனக்கு உதவி செய்யவரவேண்டுமென்று கதறினான். உடனே புலி இவனைக்காயப்படுத்திற்று. யானை இவன் குரலைக்கேட்டு திரும்பிப்பார்த்து ஓடி வந்து புலியை தனது முன்னங்காலால் ஒரு பலத்த உதை உதைத்தது. புலி இரத்தத்தையும் நுரையும் கக்கிக்கொண்டு திக்கு முக்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டது. யானைப்பாகன் ஆஸ்பத்திரியிலிருக்கிறானும். இப்பொழுது சௌக்யமடைந்து வருகிறானும்.

———

விசாகப்பட்டணம் ஆந்திர மகிலா சபாவின் 6-வது வருஷோத்சவம் இந்த மாதம் 11, 12-ந்தேதிகளில் அவ்வூர் லண்டன்மிஷன் ஹைஸ்கூலில் டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் மிஸ்டர் சுப்பிரமணியம் பந்தலுவின் மனைவியாராகிய ஸ்ரீமதி வாரணாசி அன்னபூரணம்மாவின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. முதல் நாள் அச்சபைக்கு 300-பேர்கள் வந்திருந்தார்களாம். இரண்டாம் நாள் 800-பேர்கள் வந்திருந்தார்களாம். சென்னை, காகிநாடா, குண்டூர், கர்நூல், சத்திரப்பூர், விஜயநகரம், பர்ஹாம்பூர் இவ்விடங்களிலிருந்து டெலிகேட்டுகள் வந்திருந்தார்களாம். பல ஐரோப்பிய மாதர்கள் கூட அந்தக்கூட்டத்துக்குப் போயிருந்தார்களென்று தெரிகிறது.

அந்த மீட்டிங்கில் அச்சபையின் வருஷாந்த ரிபோர்ட் வாசிக்கப்பட்டதுமன்றி, ஆரியமாதர்களின் நிலைமையைப்பற்றி ஒரு பிரசங்கஞ்செய்யப்பட்டதென்றும் ஜியார்ஜ் சக்கரவர்த்தி இந்தியாவுக்குள்ளே சரித்திர பூர்வமான கீர்த்திபெற்ற டெல்லியில் தம்முடைய முடிசூட்டு நடக்கும்படியான சமயம் இந்தியர்களுக்கு வாய்க்கும்படி செய்ததற்கு அவருக்கு நன்றி செலுத்தும் தீர்மானம் ஒன்று செய்யப்பட்டது.

மாதர் மனோரஞ்சினி.

[இது கோயம்புத்தூர் எஸ். இராமசுவாமி ஐயரால் 12-வருட காலமாக பிரசுரிக்கப்பட்டு வருகிறது.]

இது மாதர்களுக்கும் பெண்களுக்கும் அறிவைப்புகட்டும் ஒருமாதாந்தரம் பத்திரிகை. இம்மாம்முதற்கொண்டு இதற்கு 13-வது வருஷம் ஆரம்பமாகிறது. இதன் வருஷசந்தா (சாதாரண பதிப்புக்கு) ரூபா-2. உயர்ந்த பதிப்புக்குச்சந்தா ரூபா-2 அணா-8. பத்திரிகை வேண்டுவோர் சி. எஸ். இராமசுவாமி ஐயர், மாதர் மனோரஞ்சினி பத்திராதிபர், நெ. 12, தணிகாசலப்பிள்ளைத் தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை என்று எழுதவேண்டும். சந்தா முன்பணமாக கட்டப்படவேண்டும். விலாசம் மாறும்பொழுது தெரியப்படுத்தவேண்டும்.

C. S. Ramasawmy Iyer
12, Tanikachalla Pillai Street
Triplicane, Madras. S. E.

☞ C. S. இராமசுவாமி ஐயர்,
பத்திராதிபர்.

சென்ற 200-வருஷங்களாக ஜாம்நகர் மகாராஜா அரண்மனையின்
பரம்பரை வைத்தியப் பண்டிதர்களின் குடும்பத்தில் உதித்தவர்.

வைத்தியருக்கு ஏன் வீணாகப் பணம் கொடுக்கிறீர்கள்.

உலகமெல்லாம் பிரசித்திபெற்ற எங்களுடைய

மதனமஞ்சரி மாத்திரைகள்.

வாங்கி உபயோகியுங்கள் இந்த மாத்திரைகள் தங்கம் போன்றவை.

ஆண் பெண் இருபாலரும் வியாதியிருந்தாலும் வியாதியில்லாது போனாலும் வாங்கிப்புசிக்கலாம். தேகத்துக்குப் பலமும் நரம்புகளுக்கு வீரியமும் கொடுப்பதில் இதைவிடச் சிறந்த ஔஷதம் வேறில்லை.

இவை சிறிதாகவும் ருசியாகவும் இலகுவில் சாப்பிடக்கூடியவையும் ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை யாதொரு பத்தியமுமில்லாமல் குமரர் முதல் கிழவர் வரை யாரானாலும் சரியே; எக்காலத்திலும் எத்தேசத்திலும் சாப்பிடலாம்.

இவை (1) இரத்தத்தை சுத்திசெய்து, அதிகப்படுத்தும்.

(2) சகல விதமான நரம்புத் தளர்ச்சியையும் நீக்கி மூளையை குளிர்ச்சியடையச் செய்து ஞாபகசக்தியை பலப்படுத்தும், மூத்திர சம்பந்தமான சகலவித நோய்களையும் பறக்கடிக்கும்.

(3) உடம்பைச் சௌக்கியமும் பருமனும் அடையச்செய்யும்.

(4) புருஷத்துவத்தையும் வாலிபப்பருவத்தையும் கொடுக்கும்.

(5) வயிறு சம்பந்தமான சகல நோய்களையும் போக்கி கஷ்டமில்லாமல் மலத்தை வெளிப்படுத்தும்.

(6) கிழப்பருவம் வாராதபடி காத்து, இழந்துப்போன வாலிபத்தை கொடுக்கும்.

(7) மேகம், மதுமேகம், பித்தச்சூடு முதலிய சகல கொடிய நோய்களையும் வேருடன் போக்கும்.

(8) ஜனனேந்திரியங்களுக்குப் பலத்தையும் வலுவையும் கொடுக்கும்.

40 மாத்திரைகள் அடங்கிய ஒரு டின் விலை ரூ. 1. தபால்சார்ஜ் பிரத்தியேகம்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் இன்னும் எங்களிடமுள்ள சிலாக்கியமான வேறே மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும், ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, இந்தி, பெங்காளி, மராட்டி, இந்துஸ்தானி, முதலிய எந்தப்பாஷையில் வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனமாக நாங்களே லேபில் ஒட்டியனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

ஜாம்நகர் மகாராஜா எமது மருந்துகளைக் குறித்து முதல்திற நற்சாட்சிப்பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பெனாரிஸ் இண்டஸ்டிரியல் எக்ஸிபிஷனில் மெடலும் முதல்திற சர்டிபிகேட்டும அளிக்கப்பட்டிருக்கின்றன.

ராஜவைத்திய நாராயணஜி கேசவஜி,
புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா,
No. 717; சைனாபஜார்ரோட் ஜமேதார் கட்டுக்கெதிரில் சென்னை.